38

15 APR 193

தொகுதி 9.] 1930௵ மார்ச்சு௴ 1வ. [பகுதி 2

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
...நிலயம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட **"அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி"** என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது **இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம்** என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ

பிறகு அதே பெட்டியின் அடியில் ஒரு கடிதம் அகப்பட்டது. அதில் தன் கையொப்பத்தைப்போல் பலதரம் எழுதப்பட்டிருந்தது. முதலில் அது தன் கையெழுத்தேயென்று கருதினர். சற்று நன்ருய்ப் பார்த்தபோது அது தன் மனைவி யெழுதியதென்று தெரிந்தது. இவள் ஏன் நமது கையெழுத்தை யெழுதப் பழகவேண்டும் என்று சிந்தித்தார். அதற்குள் முன் கூறிய பத்திரம் கவனத்திற்கு வந்தது. ஓகோ இவள் நமது கையொப்பத்தைப் போடப் பழகவே இப்பத்திரத்தை இங்கு எடுத்து வந்திருக்கிருள் என்று புத்தியிற்பட்டது. "ஏன் இவள் இப்படி நமது கையொப்பத்தைப் போடப் பழகவேண்டும்?" என்று சிந்திக்கலானர்.

பிறகு வேறு கடிதம் ஒன்றும் அகப்படவில்லை யாதலால் பிரபு தான்கண்ட யாவற்றையும் அதது இருந்த விடத்திலேயே வைத்துவிட்டுப் பெட்டிகளை முன்போலவே பூட்டிவிட்டுத் தன் போஜன அறைக்குத் திரும்பினர்.

51-வது அத்தியாயம்

சுகசிங்கம் பிரபு பத்மாட்சியைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏற்பாடு செய்த கௌரி என்ற அயோக்கிய மாதை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று கருதுகிறோம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அதே காலத்தில் இரவு சுமார் எட்டேகால் மணியிருக்கும். அச்சமயம் கர்னல் மாரப்பனும் அவர்களுக்குக் கட்டளைகொடுத்த வேலப்பனும் கௌரி யென்ற அம்முதாட்டியின் வீட்டிற்குச் சென்

OFFICE OF THE REGISTRAR
No.
15 APR 193
MADRAS
186543

ளூர்கள். மாரப்பன் முன்னடியே சென்று அவளிடம் ஏற்பாடு செய்திருந்தபடியால் இவர்கள் வரவையெதிர்பார்த்துக் கொண்டு அவள் ஆயத்தமா யிருந்தாள். மாரப்பன் அவளுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தையும் மேற்கொண்டு பரிசாக வேறு கொஞ்சமும் அளித்துவிட்டதால் அவள் அவனை மறுபடி நண்பனுய்ச் சேர்த்துக்கொண்டாள் தனக்கு ஆகாயம் கிடைக்கிற வரையில் தன்னிடம் சம்பந்த முடையவர்களுடைய குணுகுணங்களைப் பற்றி அவள் கவனிக்கிறவளல்ல. பணம் கிடைப்பதாயின் தானே யெத்தகைய அக்கிரம நடக்கையில் பிரவேசிக்கவும் அஞ்சாதவள், அன்னியர் நடக்கையை யெங்கேனும் கருதுவாளோ?

கர்னல் மாரப்பன் இரவு நடக்கவேண்டிய விஷயம் இன்னதென்று விபரமாய் முன்னமே யவளிடம் கூறித் தக்க ஏற்பாடு செய்திருந்தான். ஆகையால் இவர்கள் வந்தவுடனே அவள் இவர்களை அழைத்துப்போய் உட்கார வைத்தாள். அந்த அறைக்குள் இன்னெரு சிறு அறையும் அதன் பக்கத்தில் சயனிக்க இடமுமுண்டு. இரண்டறைக்கு மிடையில் கண்ணுடிக் கதவிருக்கிறது. அக்கதவின்பின் திரைச்சீலை விடப்பட்டிருக்கும். ஆகையால் உள் அறையில் யாராவதிருந்தால் வெளி யறையிலுள்ளோர் அதை யறியமுடியாது. ஆனுல் உள் அறையிலிருப்பவர்கள் வெளி யறையிலுள்ளோர் பேசுவதையும் நன்ருய்க் கேட்கலாம். பிரியமிருந்தால் அந்த ஆட்களையும் காணலாம். அந்த அறைகளின் ஏற்பாடு அவ்வாறிருக்கிறது.

அம்மூதாட்டி யிருவரையும் அங்குவிட்டுச் சென்றதே வேலப்பன் உள்ளறையின் சாவியை மாரப்பனிடம் வாங்கிக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந்து உட்பக்கம் பூட்டிக் கொண்டான். கர்னல் மாரப்பன் மட்டும் வெளி யறையில் உட்கார்ந்திருந்தான்.

இரண்டொரு நிமிடங்களுக்குள் மூதாட்டி குமரவேல் பிரபுவின் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டியை யழைத்து வந்து மரியாதையோடு அறைக்குள் விட்டுச் சென்றாள். அவள் சென்றதும் அச்சீமாட்டி கர்னல் மாரப்பனை மிக்க அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டாள். பிறகு அவனை நோக்கி, "இன்று நான் மிக்க கஷ்டத்தோடு வெளியில் வரவேண்டி யிருந்தது. உண்மையாகவே இன்று திடீ லென்று பிரபு என்மேல் அன்புள்ளவ ராய்விட்டார். இது மட்டு மல்ல; நான் உலகாம்பாள் சீமாட்டி வீட்டிற்குச் செல்லவேண்டு மென்றபோது தானும் வருவதாய்க் கூறினார். ஆயினும் அதைப்பற்றி யவசியமில்லை" யென்றாள்.

மாரப்பன்:—நீ மிக்க கலவர மடைந்திருப்பதாய்க் காண்கிறது. என்ன சங்கதி நேர்ந்தது?

சீமாட்டி:—அப்படி யொன்றுமில்லை. யாவும் பின்னால் கூறுகிறேன். இவ்வளவு கட்டாயமாய்த் தவராமல் என்னை யிங்கு வரும்படி யெழுதியது எதற்காக? உன் கடிதம் என் கையில் கிடைத்தபோது பிரபுவும் எதிரிலிருந்தார்.

மாரப்பன் கலவரத்தோடு "ஆ! அவர் ஒன்றும் சந்தேகம் கொள்ளவில்லையே?" என்றான். சீமாட்டி, "இல்லை யில்லை. நாம் இவ்வளவு ஜாக்கிரதையோடு நடந்து கொள்ளும்போது எப்படி சந்தேகம் நேரிடும்? அப்படி யொன்றுமே யில்லை. இந்த அவசர சங்கதியைக் கூறும்.

மார:—நான் எப்போதுமே யுன்கூட விருக்க மிக்க ஆவல் கொண் டிருக்கிறேனென்றும், நீ எதிரில் இல்லாத போது துக்கமே யனுபவிக்கிறேனென்றும் நீ அறிந்தே யிருக்கிறாய். அதோடு இப்போது உன்னிடம் பேச வேண்டிய விசேஷ சமாசாரம் ஒன்றிருக்கிறது.

சீமா:—சரி அதென்ன சங்கதி?

மார.—நீ கொடுத்த அந்த உண்டிகள்.

சீமா:—ஆ! அவைகளா! இன்னும் அம்மாதிரி உண்டிகளையா கேட்கிருய்?

மார:—இல்லே யில்லே. நான் கூறுவதை நிதானமாய்க் கேள். நான் வேலப்பன் என்பவரிடம் கடன் வாங்குவது.

சீமா:—ஆம் ஆம். என் கணவரும் தாகிரியாகிய அந்த ஆசாமியிடமே தானும் வாங்குவதாய் இன்றுதான் கூறினர். ஆனல் நீயும் அங்கு வாங்குவது அவருக்குத் தெரியாதென்றே நம்புகிறேன்.

மார:—ஆம் தெரியாது. அது நற்காலமே.

சீமா:—ஆம். அந்த உண்டிகளை நான் உனக்கு அளித்ததாய்த் தெரிந்தால் உடனே நம்மிருவர்க்கும் நேசமிருப்பது தெரிந்துவிடும்.

மார:—இரு இரு. அவற்றைக் கொடுக்கும்போதே அச்சங்கதி இரகசியத்திலிருக்க வேண்டுமென்றும் சீக்கிரத்தில் நீயே அத்தொகையைக் கொடுத்து அப்பத்திரங்களை மீட்டுக் கொள்வதாகவும், அவைகள் பணத்திற்காகப் பிரபுவிடம் தெரிவிக்கப்படலாகாதென்றும் கூறினய். நான் அப்படியே, யாரிடம் அப்பத்திரங்களைக் கொடுத்து பணம் வாங்கினேனே அந்த நண்பரிடம் அச்சங்கதியை யிரகசியமாய் வைக்கும்படி ஏற்பாடு செய்தேன்.

சீமா:—ஆம் இதெல்லாம் உண்மையே. நீ ஆபத்துகளில் சிக்கிக்கொண்டு என்னை உதவி கேட்டாய். சீக்கிரத்தில் பணம் வரும் கொடுத்துவிடுவேன் என்ருய். நீ

யொருதரம் என் கணவனைக் கேட்டபோது உனக்காக உண்டி யளிக்க மறுத்துவிட்டார். ஆகையால் நான் என் சகோதரிக்கு வேண்டுமென்றும் சீக்கிரம் பணம் வந்துவிடுமென்றும் பொய் கூறி அப்பத்திரங்களை வாங்கினேன்.

மார:—இருக்கட்டும் இருக்கட்டும். நான் இப்போது கூறுவதற்காகக் கோபிக்கவேண்டாம். உனக்கு என்மேலுள்ள அதிக வாஞ்சையாலேயே என்னைச் சிறையாகாமல் காப்பாற்ற இப்படிச் செய்தாய். ஆனால் இப்போது அந்த உண்டிகளிலுள்ள கையொப்பங்கள் பிரபுவின் கையொப்பங்க ளல்லவென்று நான் நினைக்க வேண்டியதா யிருக்கிறது.

சீமா:—காரணம்?

மார:—வேலப்பன் சந்தேகப்பட்டு பிரபு தனக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்திலுள்ள கையொப்பத்தையும் அந்தப் பத்திரங்களிலுள்ள கையொப்பத்தையும் ஒத்திட்டுப் பார்த்து நீ கொடுத்தவை கள்ளக் கையொப்பமிட்ட பத்திரங்களே யென்று கூறுகிறான்.

சீமாட்டி யிம்மொழிகளைக் கேட்டதே பேரிடி விழுந்தவள்போல் ஆவி சோர்ந்து, முகம் வெளுத்து, "அய்யோ கடவுளே! அப்படியாயின் நான் அழிந்தே போய்விட்டேன்" என்று தன் இருகாங்களையும் முகத்தின்மேல் அறைந்துகொண்டு அழத் தொடங்கினள்.

மார:—பொறு பொறு. சங்கதி யொன்றும் வெளியாய்விடவில்லை. நீ தயவு செய்து இப்போது நடந்த உண்மையைக் கூறு. வேலப்பன் பெரிய மனிதன். இப்போதும் சங்கதி வெளிவாராதபடி ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

சீமா:—அப்படியாயின் அப்பத்திரங்களை நான் கொடுத்த சங்கதி யந்த ஆளுக்குக் கூறிவிட்டாயோ?

மாா:—ஆபத்தில் நான் என்னசெய்வது. அந்த மர்மத்தைக் கூறி யிராவிட்டால் அந்த ஆள் என்னை யுடனே போலீஸாரிடம் ஒப்பித்துவிட்டிருப்பான்.

சிமாட்டி யுடனே கண்கள் சிவந்து "அப்படியாயின் உன் அனுகூலத்திற்காக என் மானத்தை வெளியிட்டு விட்டாய்" என்றாள்.

மாா:—கோபித்துக் கொள்ளவேண்டாம். அத்தகைய ஆபத்தில் நான் வேறென்ன செய்வது?

சிமாட்டி முகம் கறுத்து "என்ன செய்வதா? ஏன் சிறைச்சாலைக்குச் செல்வது. தூக்கிற்கு வேண்டுமாயினும் செல்வது. பிராணத் தியாகமாயினும் செய்துகொள்வது. உத்தம புருஷன் "தன்னை நம்பித் தன்னிட மானத்தை யொப்பித்துத் தனக்கு இத்தகைய சகாயத்தைச்செய்த ஒரு மாதைக் காட்டிக்கொடுப்பதைவிட அதுவே உத்தமமென்று தான் கருதுவான்" என்றாள்.

மாா:—அய்யோ கடவுளே அப்படிப் பேசாதே. வேலப்பன் உன் இரகசியத்தை யொருபோதும் வெளியிடமாட்டான். அவன் மிக்க பெரிய மனிதன். கடவுள் பக்தி யுள்ளவன். உன் கணவர் அவனிடம் வந்திருந்த போதும் அவன் இப்பத்திரங்கள் தன்னிடம் இருக்கின்றனவென்று கூறவே யில்லை. இதனாலேயே அவன் யோக்யதையும் பெருந்தன்மையும் தெரிந்துகொள்ளலாம்........

சீமா:—"ஓ! சண்டாளத் துரோகியே. நான் உன்மேல் வைத்திருந்த அன்பிற்கும், உன் விஷயத்தில் சங்கடங்

களுக் குட்பட்டு செய்த உபகாரங்களுக்கும் ஆகா! என்ன பதில் செய்தாய்! அட நன்றிகெட்டவனே! நன்மை செய்தோர்க்குத் தீமை செய்யும் காதகனே. கடைசியில் என் மானத்தை யன்னியனிடம் ஒப்பித்து விட்டாயல்லவா. உனக்கு உதவிசெய்ய வல்லவோ நான் கள்ளக் கையொப்பம் வைக்க நேர்ந்தது. அப் பணத்தில் நான் ஒரு காசேனும் கண்டேனே? பல தடவைகளில் கடன்காரரால் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்படும் தருணத்திலிருந்த உன்னைக் காப் பாற்ற வல்லவோ நான் அத்தகைய இக்கட்டுகளுக் குத் துணிந்தேன்...." என்று ஆவேசம் வந்தவள் போல் கூறினள்.

அச்சமயம் அவளுடைய கண்கள் கோவைக்கனிபோல் சிவந்துவிட்டன. கோபத்தனல் அவற்றில் ஜொலித்தது. அவள் உதடுகள் படபடத்தன. தேகம் நடுக்குற்றது. கர் னல் மாரப்பன் மிக்க கலவர மடைந்து "அந்தோ! அந்தோ! நீ மிக்க ஆத்திரத்தால் இன்னது கூறுகிறேமென்று உணரா மலே கூறுகிறய். நீ யென்னை மன்னிக்காமல் எப்போதுமே விரோதியாய் வெறுத்துவிடவா போகிறுய்?" என்றுன்.

சீமா:—நீ இனி யொருபோதும் என் மன்னுப்பை யென் னமோ பெறவேமாட்டாய். ஒரு சமயம் பழைய வாசனையால் என் மனம் தன்னையு மறந்து உன்மேல் கொஞ்சமேனும் அன்போடு நாடிற்றே உடனே கட் டாயம் அந்த இருதயத்தை ஈட்டியால்குத்தி நோண்டி வெளியி லெடுத்தெறிந்து விடுவேன் என்பது நிச்சயம். இனி உன்னேடு சம்பாஷிக்கவேண்டியது ஒன்றுமில்லை. சீக்கிரம் அந்த வேலப்பனுக்கு நீ கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்து விட்டு நான் கொடுத்த பத்

திரங்களை மீட்டுவிடு. இன்றேல் அப்பத்திரங்களை யென் கணவன் நம்பும்படி விட்டு உன் அயோக்கியதையைப் பூரணமாக்கி விடு. இனி நான் போய்வருகிறேன்.

மாரப்:—"அப்படியே செய்கிறேன். கூடிய சீக்கிரத்தில் பணத்தைக் கொடுத்து அப்பத்திரங்களை மீட்டு உன்னிடமே யளித்து விடுகிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொண்டு என் மொழிகளைக் கேள்...."

என்று கூறிக்கொண் டிருக்கும்போதே சீமாட்டி நாற்காலியின்மேல் வைத்திருந்த தன் மேல்போர்வையை எடுத்தணிந்துகொண்டு, மாரப்பனை மிக்க வெறுப்போடும் அலட்சியத்தோடும் கோபத்தோடும் நோக்கி "போதும் போதும் உன் சங்கதி" என்று கூறிக்கொண்டே அறையை விட்டுச் செல்லத் தொடங்கினாள்.

மாரப்பனுக்கு மிக்க திகிலும் துயரமு முண்டாய் விட்டது. என்னமோகூற வாயெடுத்தான். பேச முடியவில்லை. "தயவு...தயவு செய்....செய்து நான் கூறுவதை ..." என்று அவன் சொல்லி முடிக்கு முன்பே சீமாட்டி அவ்விட்டிலிருந்து வெளிக்கிளம்பி விட்டாள்.

உள்ளறையி லிருந்த வேலப்பன் ஆரம்பமுதல் முடிவு வரையில் நடந்த சம்பவங்கள் யாவும் அறைக்குள் ளிருந்தபடி கண்ணாடியின் மூலமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் இதுகாறும் அச்சீமாட்டியைக் கண்டதேயில்லை. இப்போது அவளது அபூர்வ வனப்பைக் கண்டு மிக்க வியப்படைந்தான். இதுகாறும் இத்தகைய அழகமைந்த உருவத்தை யவன் கண்டதில்லை. இப்போது இத்தகைய மாது தன் காதலை யளித்ததை மதியாமல் இவன் இப்படித் துரோகம் செய்தானே யென்று கர்னல் மாரப்பன் மீதே அவ

னுக்கு மிக்க வெறுப்புண்டாயிற்று. ஆகையால் அச்சீமாட்டி யவனைத் தூஷித்தது தகுதியானதே யென்று அவன் மனதில் திருப்தியே யுண்டாயிற்று. சீமாட்டி வெளியிற் சென்றதே அவன் மாரப்பன்மேல் கோபத்தோடும் வெறுப்போடும் உள் அறையைவிட்டு வெளிப்பட்டான்.

மாரப்பன் அவனை நோக்கி, "நண்பரே! உனக்கு இப்போது திருப்திதானு?" என்று தன் மனதிலிருக்கும் துக்கத்தையும், மனக் கொதிப்பையும், அவமானத்தால் உண்டான நாணத்தையும் அடக்கிக்கொண்டு கேட்டான்.

வேலப்:—"ஒருமனிதன் ஒருமாதின் காதலைப் பெறவேண்டுமென்று கருதி அதற்கு உயிரைக்கூட தத்தஞ்செய்ய வேண்டியதாயின், அத்தகைய மாதும் இவ்வுலகிலிருக்கிருளென்று இன்றே நான் கண்டேன்" என்று கூறினுன்.

இப்போது அச்சீமாட்டி அவ்வளவு நியாயமாய்க் கடைசி சம்பாஷணையை முடித்தது எப்படி யிருக்கிறது" என்று வெறுப்போடு கேட்டான்.

மாரப்:—"என்ன நேரிட்டதெனினும் அது உன் பலவந்தத்தால் நேர்ந்ததே. இப்போது நான் நிரபராதியென்று கூறியது உண்மையே யென்று உனக்குத் திருப்தியாயிற்ரு? நடந்த சங்கதி யாவும் காதாற்கேட்டாயோ யில்லையோ?" என்ருன்.

வேலப்:—நான் இப்போது ஒரு முடிவிற்கும் வரவில்லை. ஒரு சங்கதி அச்சீமாட்டிக்கு இக்கட்டு நேரும் வண்ணம் நான் ஒன்றும் செய்யமாட்டேன். ஆனுல் நாளை காலை நீ என்னிடம் வந்து மொத்தத்தொகைக்கு உன் சொந்த பத்திரம் கொடுக்கவேண்டும். உன் சொந்த

பத்திரம் நாளை காலை கட்டாயம் வந்து கொடுக்க வேண்டும்.

மாரப்பன் மனமுடைந்து வேறொன்றும் பேசமுடியா மல் "அப்படியே கட்டாயம் நாளை காலை பத்துமணிக்கு உன்னிடம் வருகிறேன்" என்றான். மறு நிமிடம் இருவரும் பிரிந்து அவரவர்கள் மனைக்குச் சென்றார்கள்.

---

52 - வது அத்தியாயம்.

குமாரவேல் பிரபு சொல்லொணு மனக் கலவரத்தோ டும் வியாகூலத்தோடும், தன் அறையில் உட் கார்ந்துகொண்டும் எழுந்து உலவிக்கொண்டு மிருந்தார். கடைசியில் இரவு மணி பதினொன்றடித்ததும் வீட்டெதிரில் வண்டி வந்து நின்றது.

பிரபுவோ தன் மனைவியைக்கண்டு வார்த்தையாட வேண்டுமென்று மிக்க ஆவலோடிருந்தார். அதனுல் சச்சரவு நேர்வதாயினும் அவர் பின்னிடையக் கூடிய நிலைமையி லில்லை. ஆகையால் வண்டி வந்து நின்றதே ஆவலோடு தன் மனைவியைச் சந்திக்க எதிர்கொண்டு சென்றார். முன்பு அவ் வண்டியில் ஏறிச்சென்றபோது தான் பார்த்த அதே யுடை யணிந்த மாது அதேமாதிரி முகமூடியோடு வண்டியினின்று இறங்கிப் படிகளிலேறி வருவதைக் கண்டு தாழ்வாரத்தில் நின்று, அம்மாது தன் அருகில் வரும்போது, "உன் மாலைப் பொழுதைச் சந்தோஷமாய்க் கழித்தாயா?" என்று கேட் டார்.

ஆனல் அம்மாதோ நிற்காமலும் விடை பகாாமலும் மிக்க துரிதமாய் நடந்து மாடிக்கேறி யவர் கண்களுக்கு

மறைந்து விட்டாள். இந்த அபூர்வ நடக்கையைக் கண்டதே பிரபு ஒன்றுந் தோன்றாமல் திப்பிரமை யடைந்து விட்டார்.

சற்று நேரத்திற்குள் யாரோ வரும் சத்தம் கேட்டு எதிர்கொண்டு சென்றபோது தன் மனைவியின் தோழியாகிய ஜெகதாள் வருவதைக் கண்டு அவளைச் சந்திக்க முன் சென்று "என்மேல் மிக்க கோபம்கொண் டிருக்கிறாயோ?" என்றார்.

ஆனால் அவளும் வாய்பேசாமல் மிக்க துரிதமாய்ப் போய் விட்டாள்.

பிரபு;—"அடடா! இதென்ன அபூர்வ சங்கதிகள் நடக்கின்றன. இம்மாதர்களுக்கு என்ன பேய்பிடித்துக்கொண்டதோ?" என்று ஒன்றும் தோன்றாது சற்றுநேரம் உட்கார்ந்து தன் மனைவி உடைகளைக் களைந்துவிட்டு வெளியில் வருவாள் என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். அவள் வராததைக் கண்டுத் தானே போய்ப் பார்ப்பதென்று புறப்பட்டபோது ஜகதாள் எதிர் நோக்கி வரக்கண்டார். அவள் முகத்தில் குசேஷ்டையும் எளனமுமாகிய பார்வையிருந்தது. பிரபு அவளைக் கண்டதும் "ஆ! ஜெகதாள்! உன் எஜமானியிடம் ஒன்றும் கூறவில்லையே?" என்றார்.

அவள்:—இல்லை. தாங்கள் என்னைச் சற்றுமுன் சந்தித்த போது தூரத்தில் யாரோ வருவதுபோல் என் செவிகட்குக் கேட்டது. அது உண்மையோ வென்னமோ எனக்குக் கலவரமாய்விட்டது. ஒரு சமயம் என் எஜமானிக்கு இது தெரிந்துவிட்டால் என்ன ஆபத்து நேரிடும்? அதனால் தான் நான் பயந்து ஓடிவிட நேர்ந்தது.

பிரபு:—என்மேல் கோபமில்லையே?

ஜெகதாள்:—தாங்கள் இன்று செய்த அவமரியாதைக்கு ஏன் கோபம் வராது?

பிரபு:—ஆயினும் நீ என்னை மன்னிப்பாயென்று நான் அறிவேன்.

ஜெக:—"இப்போது நான் போய் வருகிறேன். இன்னும் இருக்கலாகாது" என்று கூறிச்சென்றாள்.

அந்தோ சூது, வாது, தந்திரம், வஞ்சகம் கற்ற மாதர் குணத்தையறிய யாரால் முடியும்? அவள் தந்திர சாமார்த்தியத்தை யுணராத பிரபு,

"ஓகோ! எப்படியாயினும் இவள் நமக்கிசைந்து விடுவாள். இவளைப் பக்குவம் செய்துகொண்டால் இவள் மூலமாய் நமது மனைவியின் இரகசியங்களை யறியலாகும்" என்று எண்ணிக்கொண்டார். இதனால் அவர் மனதிற்கு ஒரு விஷயத்தில் நிம்மதி யுண்டாயிற்று. தன் மனைவி போசனத்திற்கு வருவாள் அப்போதுபேசலாம் என்று எண்ணினார். சீமாட்டி தான் உலகாம்பாள் வீட்டில் போஜனம் செய்ததாகவும் ஆனால் பிரபு சாப்பிட்டதும் வருவதாகவும் வேலைக்காரியிடம் சொல்லி யனுப்பினாள்.

அவ்வாறே தன் மனைவி வந்ததும் பிரபு பேச வாய் திறக்குமுன் சீமாட்டி "நான் வண்டியிலிருந்து இறங்கிவந்தபோது உம்மிடம் பேசாமல் வந்துவிட்டது உமக்கு மிக்க வியப்பா யிருக்கும். ஆனால் அப்போது என்மனம் மிக்க கொதிப்போ டிருந்தது என்பது உமக்குத் தெரியாது. நான் உலகாம்பாள் வீட்டிலிருந்து புறப்படும் சமயம் அங்கு வந்திருந்தவர்களில் ஒரு மூதாட்டி தங்களைப் பெரிய கடை வீதியிலிருக்கும் நாடகக் கொட்டகை யருகில் கண்டதாக

வும், அச்சமயம் தாங்கள் நாடறிந்த மிக்க அயோக்கியமான ஒரு மாதிடம் சலகரணையாகப் பேசிக்கொண்டு நாடகக் கொட்டகைக்குள் சென்றதாகவும் கூறினள். அதைக் கேட்டதே நான் வீட்டிற்குத் திரும்பிவிட்டேன். அப்போது என் மனம் என்ன நிலைமையிலிருந்திருக்கும்?'' என்றாள்.

இதைக்கேட்ட பிரபு மிக்க வியப்பும் கோபமுமடைந்து "பேஷ்! இத்தகைய அபாண்டத்தைக் கூறியவள் யார்?'' என்றார். சிமாட்டி "அம்மாது இன்னொரு மாதிடம் அதைக் கூறிக்கொண்டிருந்தாள். அதோடு அவள் அது என் செவிகளில் விழும் என்று அறிந்து கூறியவளல்ல. ஆகையால் அதைப்பற்றி இனிப்பேசுவது தகுதியல்ல. அவள் ஆள் தெரியாமல் அபாண்டம் கூறிவிட்டாள் என்று தெரிந்ததே போதும். ஆனல் இதனல் நாம் வெளித்தோற்றத்தைக் கண்டு சந்தேகங் கொள்வது முட்டாள் தனமென்று உணரலாம்'' என்றாள்.

இதைக்கேட்ட பிரபு தன்மனைவி தன்மேல் சந்தேகங் கொள்ளாமற் போனதே மிக்க நலமென்று கருதி வேறொன்றும் கூறமுடியாமல் அவள் அபிப்பிராயத்திற்காகத் தான் சந்தோஷ மடைந்ததாகவே கூறிவிட்டார்.

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! உங்களில் மேல்நாட்டு நாகரீகம் உயர்ந்ததென்றும் அதை நாமும் அனுசரிக்கவேண்டுமென்றும் மதிமயக்கங் கொண்டிருப்போர்களனைவரும் தயவுசெய்து இச்சந்தர்ப்பத்தைப் பற்றி சற்று நன்றாய்ச் சிந்தியுங்கள். கதைத்தொடர்ச்சி எங்கும் ஓடிப்போய் விடாது. நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்காகவும் உங்கள் சந்ததியாரின் முன்னேற்றத்திற்காகவும் நீங்கள் இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டியது அவசியம்.

கதையின் போக்கால் அப் பிரபுவின் மனைவி நடக்கை இதுகாறும் ஒருவாறு உங்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது. இப்போது நடந்த சம்பவங்களால் ஜெகதாள் என்ற தோழி தன் எஜமானிக்கு எவ்வளவு உளவாயிருக்கிறு ளென்பதும் அவளுடைய துணிகரமான தீரச் செயல்களும், இத்தகைய இரண்டு ஆசாமிகள் உளவாயிருந்து நடந்தால், தன் மனைவியைக் கற்புடையவளென்று நம்பி யிருக்கும் ஒரு மனிதனுக்கு எத்தகைய தீங்குகளைத் தான் செய்யக்கூடாதென்பதும் பின்னால் உங்களுக்கு நன்கு புலப்படும்.

அந்தோ இவ்வாறு ஒரு குடும்பத்தில் சம்பவிப்பதற்கும், அதைப் புருடன் துணிந்து அறிந்துகொள்ள முடியாமல் தனக்கு எவ்வளவு சந்தேகம் இருப்பினும் அதை யடக்கிக்கொண்டு தன் மனோவேதனையை யுள்ளுக்குள்ளேயே சகித்துக்கொண்டு நரகவேதனைப் பட்டுக்கொண் டிருக்கும்படி நேர்வதற்குக் காரணமென்ன? மிக்க நாகரீகமாய்க் கருதப்படும் தேசாசாரமே. அதாவது, ஸ்திரீ தன் கணவனை விட்டுத் தனியே யெங்கு வேண்டுமாயினும் செல்லலாம், பரபுருடரோடு தாராளமாய்ப் பேசலாம், மனைவிக்கு வரும் கடிதத்தை அவள் சம்மதித்துத் தனக்குக் காட்டினலன்றி கணவன் அதைக் காட்டும் படி யவளைப் பலவந்தம் செய்யலாகாது, அன்னிய புருடனேடு மனைவி ஒரு அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால் புருடன் அவள் அனுமதியின்றி யுள்ளே செல்லலாகாது, மனைவி தனக்கு முன் பின்னறிமுகமில்லாத ஒரு மனிதனேடு தனியே வெளியில் உலாவச் சென்றாலும் புருடன் தடை சொல்லக்கூடாது. அவர் யாரென்று அவன் தன் மனைவியைக் கேட்கும்போது மனைவி அவர் என் தகப்பன் சினேகர் என்பது முதலிய ஏதாவது ஒரு விடையளித்தால் கணவன் அதோடு திருப்தி

யடைந்திருக்க வேண்டியதே. அந்தோ! இதுவோ நாக ரீகம்!

சகோதர சகோதரிகளே! இன்னொருவருடைய ஆசாரத்தைப் பற்றி தூஷிக்க நாம் இதை யெழுதுவதாக எள்ளளவும் கருதவேண்டாம். அத்தகைய நோக்கமாவது எண்ணமாவது நமக்கில்லை ஏனெனில் அது நமக்கு அவசியமல்ல. அதோடு ஒரு நாட்டாருடைய ஆசாரம் இன்னொரு நாட்டார்க்குப் பொருத்தமாயிராது. அவரவர்களுக்கு அதது திருப்தியா யிருக்கிறது. அவர்கள் அதையே நாகரீகமானதாகவும் உயர்வானதாகவும் கருதி நடக்கிறார்கள்.

நமது நாட்டாரோ மகரிஷிகளும் மகான்களும் தெய்வீகம் பொருந்தியர்களுமாகிய தங்கள் முன்னோர் ஆசாரங்களை யிகழ்வாய்க் கருதி முன்பின் யோசிக்காமலே அன்னியர் ஆசாரங்களைப் பின்பற்ற முயல்கிறார்கள்.

அதிலும் நம் நாட்டுச் சகோதரிகளில் சிலர் இப்போது தம் பெண்களையே அன்னிய ஆசாரங்களில் பழக்கத் தொடங்குகிறார்கள். அந்தோ அதனால் விளையத் தக்க விபரீதங்களைப் பற்றி அவர்கள் சற்றேனும் கருதுகிறார்களில்லை. அத்தகையோர் அப்பழக்கத்தால் உண்டாகும் கெடுதிகளை யுணர்ந்து அக்கெட்ட வழியினின்று விலகவேண்டு மென்பதற்கே நாம் இங்கு இவ்விஷயத்தை விவரித்துக் காட்ட நேர்ந்தது. ஆகையால் நமது சகோதரிகள் இதை நன்கு கவனிக்கப் பிரார்த்திக்கிறோம்.

* * * *

* * *

நேயர்களே! இப்போது நாம் வேறொரு விடத்தில் நடக்கும் விஷயங்களைக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமா யிருக்கிறது.

இரத்னபுரி நகரத்தின் தென்மேற்குப் பக்கத்தில் ஒருவன் பலசரக்குக் கடை வைத்துக்கொண்டிருக்கிறான். அக்கடையில் இன்னது இருக்கிறது இன்னது இல்லையென்றில்லை. கடையில் எல்லா சாமான்களும் மிக்க ஆடம்பரமாகவும் படாடோபமாகவும் பார்ப்பவர்கள் மனதைக் கிரகிக்கும் வண்ணமாய் வைக்கப்பட்டிருந்தன. முதலாளியாகிய தேவதாஸ் என்பவன் யாவராலும் கௌரவமான வர்த்தகனாய் மதிக்கப்பட்டிருக்கிறான்.

உண்மையில் அவன் யாரெனில், இப்போது தானப்பன் என்ற கொலையாளியிடமிருக்கும் இராசப்பன், காமாட்சி என்றவர்களும் அனுஷ்டையாகிய ஜனகனும் ஆதியில் சிறுவர்கள் அடங்கிய ஒரு கள்ளக் கூட்டத்தாரோடு வசித்து வந்தார்களென்று கூறினோமல்லவா, அக்கள்ளக் கூட்டத்தின் தலைவனாகிய பக்கா கந்தன் என்ற வாலிபனே இவன். இப்போதிவன் மாறு பெயர் வைத்துக்கொண்டு ஒரு நாணயமான வர்த்தகன்போல் நடித்து வருகிறான். இப்போதிவனுக்கு 35-வயதிருக்கும். மேல்கூறிய வாலிபர்களைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோமாதலால் கதையைத் தொடங்குவாம்.

அக்கடையின் பின்பக்கத்தில் ஒரு சிறு இரகசிய அலறையிருக்கிறது. முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் இரவு ஒன்பது மணிக்கு அந்த அறையின் மத்தியிலுள்ள ஒரு சிறு வட்டமான மேஜையைச் சுற்றி மூன்றுபேர் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் தேவதாஸும் நமது இராசப்பனும் அவன் சகோதரியாகிய காமாட்சியுமே. மேஜைமேல் குடி வகைகளும் தின்பண்டங்களும் வைக்கப்பட்டிருந்தன. மூவரும் குடித்துக்கொண்டே சம்பாஷணையி லிருக்கிறார்கள்.

தேவதாஸ்:—அப்படியானல் ஜனகன் தானப்பனைக் காட்டிக் கொடுக்கவில்லை யென்று உங்களுக்குத் தெரிகிறது.

இராசப்பன்:—ஆம். நான் நிச்சயமாய்க் கூறுவேன். நான் முன்னமே கூறியபடி அவன் அப்போது முதலே° துப் பறியும் செல்வநாதன் கூடவே யிருக்கிருன்.

தேவ:—அப்படியானல் அவன் தாராளமாய் உளவி யிருப் பான்.

இராச:—அவன் எப்படிச் செய்திருப்பான். எங்களுக்கே பத் திரிகையில் பார்க்கிற வரையில் இச்சங்கதியே தெரி யாது என்று கூறுகிறேனே. எங்களுக்கே அச்சங்கதி கூறப்படவில்லை யாகையால் அவனுக்கு அதைப்பற்றி யொன்றுமே தெரியாதென்பது நிச்சயம்; தானப்பன் அதைப்பற்றி யொருவர்க்கும் கூறவில்லை. கொள்ளை நடந்த வீட்டிலிருந்த வேலைக்காரன் சுடப்பட்டானே, அவன் மட்டுமே யிவ்விஷயத்தில் தானப்பனுக்குக் கூட்டாளி.

இவ்வாறு இன்னும் சற்றுநேரம் பேசியதும் கடைசி யில் தேவதாஸ் "சரி. கடைசியில் அவன் ஆற்றில் மடிந் தான். ஆனல் யார் அவனைக் காட்டிக்கொடுத்தது?" என் பதே.

இராச:—ஒரு சமயம் அவ்வீட்டு வேலைக்காரனுகிய சாரங் கனே பின்னல் மனஸ்தாபப்பட்டு போலீஸாருக்கு உளவா யிருந்திருக்கலாகாதா.

தேவ:—ஆகா, இருக்கலாகும். இப்போ தென்னசெய்யக் கருதுகிறீர்கள்—கடையைத் திறந்து வைத்துக்கொண் டிருக்கப் போகிறீர்களோ?

இராச:—அப்படி செய்யாவிட்டால் நாங்கள் எப்படிச் ஜீவிப்பது?

தேவ:—நண்பர்களே! நீங்கள் கூறுவது சரியே. ஆனால் பழைய வழிகளிற் செல்லாதேயுங்கள். அப்படி அவசியம் நேர்ந்தாலும் மிக்க மறைவாகவும் அடக்கமாகவுமிருக்கவேண்டும். பார்ப்பவர்களுக்கு நீங்கள் அக்கடையை நாணயமாய் நடத்திக்கொண்டு அதனாலேயே ஜீவனம் செய்வதாய்த் தெரியவேண்டும். இதோ பாருங்கள். நான் நிம்மதியாகவும் க்ஷேமமாகவுமே ஜீவனம் செய்கிறேன். ஏராளமாகக் களவாடப்பட்டச் சாமான்களையே வாங்கினாலும் விற்பவர்களிடம் கூட அதை நான் அறிந்திருப்பதாய்க் காட்டிக் கொள்வதில்லை. அவர்கள் கொண்டுவரும் சாமான்களை மிக்க குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வது. முன்பு நீங்களும் நானும் ஒன்றாய் இருந்தபோது நான் நடந்து கொண்டிருந்த மாதிரிக்கும் இப்பொழுது நடந்துகொள்ளும் மாதிரிக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது கவனியுங்கள்.

இராச:—இது மிக்க சேர்த்தியான விடமே.

தேவ:—ஆ! ஜனகன் செல்வநாதனால் எப்படி நடத்தப்படுகிறான் என்பதைக் கூறவில்லையே.

இராச:—"ஓ இப்போது அவன் ஒரு இராஜ குமாரனைப் போல் நடத்தப்படுகிறான். செல்வநாதன் தன்னை மிக்க அன்பாய் நடத்துவதாகவும் அவனை விட்டுப் பிரிந்து விடத் தனக்கு மனவருத்தமா யிருப்பதாகவும் கூறுகிறான். ஆனால் இப்போது நடந்த விஷயத்திற்குப் பின் அவனிடம் இருக்கத் தனக்குப் பிரியமில்லையென்கிறான். செல்வநாதன் தன் கடமையையே செய்தானென்று தனக்குத் தெரியுமெனினும் தானப்ப

னுடைய மரணத்திற்குக் காரணமானவனோடிருக்கத் தனக்கு மனம் பிடிக்கவில்லை யென்கிறான்." என்றான்.

அச்சமயம் தெருக்கதவை யாரோ தட்டுவதைக்கேட்டு தேவதாஸ் எழுந்து சென்றான். அவன் ஆச்சரியமாய்ச் சத்தமிட்டதும் பிறகு இருவர் குசுகுசுவென்று பேசுவதும் வாலிபர் செவிகட்குக் கேட்டது. என்னமோ விசேஷம் நடக்கிறதென்று இராசப்பனும் காமாட்சியும் பேசிக்கொண்டார்கள்.

இரண்டொரு நிமிடங்களில் தேவதாஸ் முகமூடியணிந்த ஒரு மனிதனோடு அறைக்குள் வந்தான். வந்த மனிதன் சரியாய்த் தன் முகமூடியை யெடுப்பதற்குள் காமாட்சி தன் ஆசனத்திலிருந்து துள்ளி யெழுந்து "ஓ! தானப்பன்!" என்றாள்.

வந்த மனிதன். "ஆம் நானே உயிரோடு வந்திருக்கிறேன்" என்று தன் காதலியையும் இராசப்பனையும் ஆலிங்கனம் செய்துகொண்டு ஆசனத்தில் உட்கார்ந்தான்.

53-வது அத்தியாயம்

தேவதாஸ் கதவுகளைத் தாளிட்டுப் பூட்டிக்கொண்டு திரும்பி வந்து துரிதமாய்த் தானப்பனுக்கு ஒரு பாத்திரத்தில் சாராயம் விட்டுக் கொடுத்தான். தானப்பன் அதை வாங்கி மிக்க சந்தோஷத்தோடும் ஆவலோடும் அருந்தி விட்டுச் சற்றுநேரம் மௌனமா யிருந்து பிறகு அவர்களை நோக்கி "என்னை உயிரோடு கண்டது உங்களுக்கு மிக்க வியப்பாகவே யிருக்கும். நான் ஆற்றில் முழுகி மாண்டு போனேனென்றே யெண்ணி யிருப்பீர்கள்.

நானும் பத்திரிகைகளில் பார்த்தேன். அது ஒரு விஷயத்திற்கு நல்லதே ஆயினும் அபாயகாமான ஆபத்தே" என்றான்.

காமாட்சி:—அப்படியானல் நீ சீக்கிரம் விடுவந்து சேரமுடியாதோ?

தானப்பன்:—நான் வீட்டிற்கு வருவதே யெப்படி யென்று எனக்கு விளங்கவில்லை. இரண்டு சந்தர்ப்பங்களே யிருக்கின்றன. ஆனால் அவை நேரிடக் கூடியவைகளாய்த் தோன்றவில்லை.

காமா:—என்ன சந்தர்ப்பங்கள்?

தான:—ஒன்று செல்வநாதன் மடியவேண்டும். அப்போது மற்ற போலீஸாருக்கு கைக்கூலி கொடுத்து "அங்கு களவாடியவன் இவன்தான் என்று நிச்சயமாய்க் கூற முடியாது" என்று கூறும்படி செய்துவிடலாம். இன்னொன்று யாராவது தூக்குத் தண்டனை யடைந்து அவர்களைத் தூக்கிற்போட ஆள் அகப்படாவிட்டால் யாராவது வந்து "நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் பூரண மன்னிப்பளிப்பதாயின், நான் இவ் வேலையைச் செய்கிறேன்" என்றால் துரைத்தனத்தார் ஒப்புக் கொள்வார்கள். இவை சீக்கிரத்தில் சம்பவிக்கக் கூடியதல்ல.

தேவ:—ஆயினும் இவைகளைவிட அசம்பவமாய்த் தோன்றக்கூடிய விஷயங்களெல்லாம் சம்பவித்திருக்கின்றன.

தான:—இருக்கலாம்....போகப்போகப் பார்ப்போம். ஜனகன் எங்கே?

இரா:—பழையபடி வீட்டில்தான் இருக்கிறான். உனக்கு அவன்மேல் சற்றும் சந்தேகமில்லையே?

தான:—"எள்ளளவுமில்லை. அச்சங்கதி நடக்கப்போகிற தென்பதே யவனுக்குக் கடுகளவும் தெரியாது. அந்த ஆபத்து எப்படி சம்பவித்ததென்று எனக்குத் தெரியும். கடந்த வாரம் நானும் கொள்ளைநடந்த வீட்டு வேலைக்காரனும் அங்கிருக்கும் ஹோட்டலின் ஒரு அறையில் உட்கார்ந்து அந்த ஏற்பாட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அப்படி நாங்கள் செய்தது பெரிய மடத்தனம். ஏனெனில் அப்போது அங்கே ஒரு நாட்டுப்புறத்தான் ஒரு மூலையில் உட்கார்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். நாங்கள் கெட்டகாலத்தால் அவன் மெய்யாகவே நித்திரை செய்கிறானென்று நம்பித் தாராளமாய்ப் பேசிவிட்டோம். உண்மையில் அவன் அப்படிப் பாசாங்கு செய்தானே யன்றி உண்மையாய்த் தூங்கியவனல்ல. அந்த வேலையே சுத்தர் அதிட்டமாய் முடிந்தது." என்றான்.

காமாட்சி:—சரி. நீ எப்படித் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டாய்?

தான:—ஆற்றில் குதித்ததே நீரோட்டம் வேகமாய்த் தூரத்தில் மறு கரையின் ஓரம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டது. போலீஸார் நான் குதித்த விடத்தில் வந்து பார்த்தார்கள். நான் கண்ணுக்குப் புலப்படாததையும் ஆற்று வெள்ளத்தின் வேகத்தையும் கண்டு நான் அமிழ்ந்து மடிந்துபோ யிருப்பேன் என்று தீர்மானித்துக் கொண்டு திரும்பிவிட்டார்கள். நான் மெதுவாய்க் கரையேறி வாசுதேவ நிலையத்திற்குச் சென்றேன். அங்கு நான் இருப்பதால் அவ்வீட்டி லுள்ளவர்களுக்கு அதிக கலவரம் உண்டாய்விட்டது. அதோடு எனக்கும் அங்கு அடைபட்டிருக்க முடியவில்லை. ஆகை

யால் அந்தவீட் டெஜமானுடைய நெடுஞ்சட்டை தலை யணி முதலியவைகளை யெடுத்துக் கொண்டு, யாரிட மும் நம்பிச்செல்லப் பிரியமின்றி என் பழைய நண்ப னாகிய தேவதாஸிடம் வந்தேன். இச்சமயம் நீங்கள் இங்கு இல்லாதிருந்தால், உங்களை யழைத்து வரும்படி வீட்டிற்கு இந்த நண்பனை யனுப்பி யிருப்பேன்.

காமாட்சி:—சரி. இப்போது என்னசெய்யப் போகிறாய்?

தானப்பன்:—"இன்னது செய்வதென்று நான் ஒரு தீர் மானமும் செய்யவில்லை. ஆகையால் தற்சமயம் நீங் கள் வீட்டிலேயே யிருங்கள். நான் ஆற்றில் மடிந்த தாய் நீங்கள் நம்பியிருப்பது போலவே அபிநயம் செய் யுங்கள். என்னிடம் தற்காலமாய்ப் போதுமான ரொக்கப் பணம் இருக்கிறது. நான் கொஞ்சகாலம் நமது நண்ப னிடமே யிருக்கிறேன். இவனும் தனியாகவே யிருக் கிறான், அல்லவா?" என்று தேவதாஸின் முகத்தை நோக்கினான்.

தேவதாஸ் "ஆம் நான் தனியாகவே யிருக்கிறேன்" என்றான். ஆனால் அவன் கூறிய மாதிரியால் தானப்பன் தன் வீட்டில் தங்குவது அவனுக்கு விருப்பமில்லை யென்று நன்கு விளங்கியது.

தானப்பன் அவன் கருத்தை யறிந்து கொள்ளாதவன் போலவே "அப்படி யில்லாவிட்டால் நமது பக்கிரி பொன்ன னுடைய வளவிற்குச் செல்கிறேன்" என்றான்.

அச்சமயம் யாரோ தெருக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. இராசப்பன் "யாரோ அவசரமாய்த் தட்டுகிறார் கள்" என்றான். தானப்பன் "நான் யார் கண்களுக்கும் புலப்படக் கூடாது" என்றான்.

தேவதாஸ் "அப்படியாயின் நீங்கள் மூவரும் மாடிமே லுள்ள அறைக்குப் போய்விடுங்கள்" என்று ஒரு இரகசியக் கதவைத் திறந்து அவர்களை யனுப்பிவிட்டுத் துரிதமாய்ச் சென்று தெருக்கதவைத் திறந்தான். உடனே அவன் காத்தி லிருந்த இராந்தல் வெளிச்சம் செல்வநாதன் முகத்தின்மேல் வீசியது.

செல்வநாதன் முகத்தைக் கண்டதே தேவதாஸுக்குப் பயமும் கலவரமு முண்டானதால் அவன் முகத்தில் திகிற் பட்ட குறி யுண்டாயிற்று. ஏனெனில், அத்துப்பறியும் சிங் கத்தைக் கண்டதும் "ஓகோ! இவன் எப்படியோ தானப் பன் நமது வீட்டிற்கு வந்த சங்கதியை யறிந்துகொண்டு இங்கு வந்திருக்கிறான்" என்று எண்ணிக்கொண்டான்.

செல்வநாதன் அவனைக் கண்டதும் "ஏன் தேவதாஸ்! க்ஷேமந்தானே? உனக்கு வேறு வேலை யில்லாதிருந்தால் உன்னிடம் ஒரு சங்கதியைப் பற்றி பேசவேண்டு மென்று வந்தேன்" என்றான்.

தேவதாஸ் திகிலோடு என்னோடவா? என்று வீதியைப் பார்த்து விட்டு செல்வநாதன் தனியாகவே வந்திருக்கிறான் என்று தெரிந்துகொண்டு மறுபடி "அய்யா! என்னோடவா!" என்றான்.

செல்வநாதன் தேவதாஸின் முகக் குறியால், தன் வர வால் அவன் மிக்க கலவர மடைந்திருக்கிறான் என்றுணர்ந்து "ஆம்; உன்னிடமே. அதுவும் தொழில் முறைமையாய்ப் பேசவேண்டியதே" என்று கூறினான். தேவதாஸ் கூடிய வரையில் தன் கலவரம் தோன்றாவாறு முகத்தைச் சரிப் படுத்திக் கொண்டு "உள்ளே வாரும்! உள்ளே வாரும்!" என்று மரியாதையோடு செல்வநாதனை அழைத்துக்கொண்டு போய் ஒரு அறையில் உட்கார வைத்து "காபி, பிராந்தி, பீர்

எதுகொண்டு வரட்டும்?" என்று உபசாரத்தோடு கேட்டான்.

செல்வநாதன்—"ஒன்றும் வேண்டாம். எது நீ தனியா யிருக்கிறதுபோல் காண்கிறது?" என்முன்.

தேவதாஸ் "ஆம் முழுதும் தனியாகவே" என்முன். ஆனல் மிக்க கலவரத்தோடு தானப்பன் முதலிய மூவரும் மாடிமேற் சென்ற வாசற்படியை மிரண்ட பார்வையோடு பார்த்துவிட்டு அவ்வாறு கூறினன். செல்வநாதன் "ஓகோ இவன் இப்போது தனியா யிருந்தாலும் நாம் வந்து கதவைத் தட்டியபோது தனியாயில்லை. அப்போ திவனே டிருந்த ஆசாமியோ, ஆசாமிகளோ இப்போது மேல் மாடியில் ஒளிந்துகொண் டிருக்கிருர்கள்" என்று உடனே தெரிந்து கொண்டான்.

அவன் தேவதாஸை நோக்கி "நான் உன்னிடம் ஒரு இரகசியமும் நம்பகமுமான விஷயத்தைப் பற்றி பேசவேண்டும். அவ்விஷயத்தில் நீ யெனக்கு உதவி செய்தால் உனக்குக் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது கிடைக்கும்" என்முன்.

தேவதாஸ் "இவன் தானப்பனைக் காட்டிக் கொடுக்கும்படி கேட்கப்போகிருன். அவனுடைய கூட்டாளிகள் நகாமுழுதும் பலவிடங்களி லிருக்கிருர்கள். அவனைக் காட்டிக் கொடுத்தால் நமக்கு எப்படியும் தீங்கு சம்பவிக்கும்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு, செல்வநாதனை நோக்கி, "அய்யா! தாங்கள் கோரும் உதவி ஏதேனும் கெடுதியான விஷயத்திற்காகவாயிருந்தால் என்னல் முடியாது" என்முன்.

செல்வ:—"நீ யதை யொருகாலும் கெட்ட விஷயமாய்க் கருதமாட்டாய். முதலாவது இங்கு நாம் பேசுவது

யார் காதிலாவது விழுமோவென்ற பயமில்லையே? அதைக்கூறு!" என்றான்.

தேவ:—வேலைக்காரி மாடிமேல் படுக்கை யறையைச் சுத்தம் செய்துகொண்டிருக்கிறாள். அவள் செவியில் எந்த சங்கதியாவது வீழ்ந்தால் அவள் மனதில் தங்காது.

செல்வ:—அப்படியாயின் நாம் சமீபத்திலுள்ள ஒருஹோட்டலுக்குச் சென்று பேசலாமே.

தேவ—உண்மையில் நான் இரண்டொரு நண்பர்களின் வரவிற்காக எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீ கூறப் போகும் சங்கதியை மட்டும் குசுகுசுவென்று கூறலாமே.

செல்வ:—தாய் தந்தையர் யாரென்று தெரியாத வாலிபன் இருக்கிறானே ஜனகன் என்பவன் அவனைப்பற்றியே யுன்னிடம் பேசவேண்டும்.

தேவ:—அவனைப்பற்றி யென்ன சங்கதி கேட்கப்போகிறாய்?

செல்வ:—"ஒன்றுமில்லை. அவ்வாலிபனுடைய சிறு பருவத்திலிருந்து அவன் சரித்திரம் எனக்குத் தெரிய வேண்டும். நீ இவ்விஷயத்தில் மட்டும் உதவிசெய்தால் ஆயிரம் ரூபாய் உனக்காக என் ஜேபியிலேயே யிருக்கிறது" என்றான்.

தேவ:—"ஆ! ஆயிரம் ரூபாயா! தங்களுக்குத் தெரியவேண்டியது?" என்றான்.

செல்வ:—அவன் பிறப்பு மிக்க மர்மத்திலேயே யிருக்கிறதென்று எனக்கு முன்னமே தெரியும். அவன் குழந்தையா யிருக்கையில் யாரிடத்திலிருந்தோ களவாடப் பட்டானும். இராசப்பன் என்ற சிறுவன் தந்தை அவ

னைத் திருடி வந்து நீ முன் இருந்தவிடத்தில் கொண்டு வந்துவிட்டான். அப்போது உன்பெயர் பக்கா கந்தன் என்று எனக்குத் தெரியும். அப்போது உன் வைப் பாட்டியாயிருந்த கமலம் என்பவள் இவனை வளர்த் தாளென்றும், இப்போது தானப்பன் வீட்டில் வசிக் கும் இராசப்பன் காமாட்சியென்ற இரண்டு பேரும் குழந்தையைக் களவாடி வந்தவன் மக்களேயென் றும் எனக்குத் தெரியும்.

தேவ:—"இவ்வளவு சங்கதி உமக்குத் தெரிந்திருந்தால் இன் னும் என்னால் அறிந்துகொள்ளவேண்டியது என்ன விருக்கிறது?" என்று ஆவலோடு கேட்டான்.

ஆனால் அவன் மனதில் இப்போது நிம்மதி யுண்டா யிற்று. ஏனெனில் செல்வநாதன் பேசிய மாதிரியால், அவன் தானப்பன் இறந்து போனதாகவே நம்பி யிருக்கிறா னென்றும் ஆகையால் அவன் தற்செயலாய் வேறு விஷயத் திற்காகவே வந்தானென்றும் எண்ணிக்கொண்டான். செல்வ நாதன் "நான் கூறியவற்றிற்கு மேல் உனக்குத் தெரிந்த சங் கதிகள் ஏதேனு மிருந்தால் அதைக் கூறவேண்டு மென் பதே. முக்கியமாய் அவன் முதல் முதல் குழந்தையா யிருக்கையில் நீ யிருந்த விடத்திற்குக் களவாடிக்கொண்டு வரப்பட்டது எப்போது என்பதை யறியவேண்டும்" என் றான்.

தேவதாஸ்:—"அவன் கொண்டு வரப்பட்டது 1795ளு ஜூன்மீ 1வ" என்றான்.

செல்வ:—இத்தேதி எப்படி யுன் கவனத்தில் இவ்வளவு சுலபமாய் நிலைத்திருக்கிறது?

தேவ:—ஏனெனில் அதற்கு அடுத்த நாள்தான் இராசப்பன் தந்தை கொலைபுரிந்து விட்டுத் தானும் தற்கொலை செய்துகொண்டான்.

செல்வ:—இராசப்பனும் அவன் தந்தையும் தானே அக் குழந்தையைக் களவாடியது?

தேவ:—ஆம் அதைக் கூறுவதில் ஒரு பயமுமில்லை.

செல்வ:—நகர உத்தியான வனத்திலிருந்து தானே அக்குழவியைக் களவாடி வந்தார்கள்?

தேவதாஸ், "ஆம். உமக்கு எல்லா சங்கதிகளும் தெரியும்போ லிருக்கிறதே-எப்படி யுமக்குத் தெரிந்ததோ எனக்கு மிக்க ஆச்சரியமா யிருக்கிறது. ஏனெனில் நான் ஒருவருக்கும் இவ்விஷயங்களைப் பற்றி கூறவில்லை. இராசப்பனுக்கும் அவன் சகோதரிக்கும் இந்த விவரங்கள் தெரியாது. ஏனெனில் அப்போது அவர்கள் மிக்க சிறுவர்களா யிருந்தார்கள். இவர்கள் தமையன் எனக்கு இந்த இரகசியங்களை நம்பிக்கையாய் என்னிடம் கூறினான். அவனும் இரண்டொரு நாட்களில் கோரமான மரண மடைந்தது உமக்குத் தெரிந்ததே. அதனால் அவன் வேறு விவரங்களைப் பற்றி கூற சந்தர்ப்பம் நேரிடவில்லை.

186543
சென்னை-600 008

செல்வ:—அது யாருடைய குழந்தையென்று உனக்குக் கூறினானா?

தேவ:—இல்லை.

செல்வ:—அவர்கள் ஏன் அக்குழந்தையைக் களவாடினார்கள் தெரியுமா?

தேவ:—அக்குழந்தையின் தந்தைமேல் இராசப்பன் தந்தைக்கு மிக்க வஞ்சமிருந்தது; அதைத் தீர்த்துக் கொள்ளவே யப்படிச் செய்தார்கள்.

செல்வநாதன் தன் மடியிலிருந்து நூறு சவரன்களை யெடுத்து மேஜைமேல் வைத்து தேவதாஸை நோக்கி

"உனக்கு இந்த விஷயத்தைப் பற்றி இவ்வளவுதானா தெரியும்? இதற்குமேல் முக்கியமான விஷயம் ஏதாவது ஒன்று கூறினால் இதோ இந்த நூறு சவரன்களும் உன்னுடையதே" என்றான்.

தேவதாஸ் பணத்தைக் கண்டதே முகமலர்ச்சி யடைந்து "ஒரு சமயம் இச்சிறுவன் உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் செல்வவந்தர் புத்திரனா யிருந்துவிட்டால் அவனை மறைத்து வைத்திருந்ததற்காக எனக்கு ஏதேனும் ஆபத்து உண்டாகுமோ?" என்று வினவினான்.

செல்வநாதன் "உனக்கு ஒரு ஆபத்தும் நேரிடாதென்று நான் எழுதிக் கொடுக்கிறேன்" என்றதே, தேவதாஸ் "சரி சரி, உமது வாக்குத் தத்தமே போதும். என்னால் கொடுக்கக்கூடிய ஒரேயொரு அத்தாட்சியைக் கொண்டு வந்து தருகிறேன். ஆனால் அது பூரணமான ருசுவாகும்" என்று கூறிவிட்டு எழுந்து மேல் மாடிக்குச் சென்றான்.

தேவதாஸ் தன் படுக்கை யறைக்குள் சென்றதும் அங்கிருந்த தானப்பன், இராசப்பன், காமாக்ஷி, மூவரும் மிக்க ஆவலோடு அவன் முகத்தை நோக்கினார்கள். ஆனால் வந்திருப்பவன் செல்வநாதன் என்று கேள்விப்பட்டதே அவர்களுக்குப் பெருந்திகில் உண்டாய்விட்டது. தேவதாஸ் சுருக்கமாய்ச் செல்வநாதன் வந்த காரணத்தைக் கூறியதே யவர்கள் பயம் நீங்கி அவன் ஜனகனைப் பற்றி விசாரிப்பது என்ன காரணத்திற்கோ வென்று மிக்க வியப்படைந்தார்கள்.

தேவதாஸ் உடனே தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த கடிதத்தில் கட்டிய ஒரு சிறு சிப்பத்தை யெடுத்துக் கொண்டு கீழிறங்கப் போகும் சமயம் தானப்பன் ஆத்திரத்தோடு அவன் தோளைப் பற்றிக்கொண்டு "நண்பனே! நீ எனக்கு ஒரு சகாயம் செய்வாயா?" என்றான்.

தேவதாஸின் மனதில் அவன் கேட்டது இன்ன தென்று பட்டதே நடுக்கமுற்று "என்னை யென்ன உதவி செய்யச் சொல்கிறாய்?" என்றான்.

தானப்பன் "செல்வநாதன் இப்போது இந்த வீட்டிற் குள் வந்திருக்கிறான். அவன் உள்ளே வந்ததை யவன் கண்பர்கள் பார்த்திருந்தாலும் அவன் மறுபடி யுயிரோடு இதை விட்டு வெளியிற் செல்லலாகாது." என்றான்.

தேவதாஸ்:—"சே சே! நான் ஒருகாலும் அப்படிச் செய்ய மாட்டேன்." என்றான்.

தானப்பன் உடனே மிக்க கோபமடைந்து "அட கோழையே!..." என்றான். அதற்குள் தேவதாசின் முகத் தில் உண்டான கோபமான மாறுதலைக் கண்டு பயமடைந்து, "ஆ! தேவதாஸ் என்மேல் கோபிக்காதே. என் மனோ நிலைமை யிருக்கிற மாதிரியைக் கவனி. நான் கூறுவது இன்னதென்று எனக்குத் தெரியவில்லை" என்றான்.

உடனே இராசப்பன் காமாட்சி யிருவரும் தேவதாசன் எங்கே தானப்பனைச் செல்வநாதனிடம் பிடித்துக் கொடுத்து விடுவானோ வென்று மிக்க பயமடைந்து, அவனுக்குச் சமா தானங் கூறினார்கள்.

தேவதாஸ் தானப்பனை நோக்கி, "நான் உன்னைக் காட் டிக் கொடுத்துவிடுவேன் என்று எண்ணிக்கொண்டாயோ? அப்படிச் செய்யமாட்டேன்" என்றான்.

தானப்பன்:—"இல்லை யில்லை. அப்படி நினைக்கவில்லை. ஆனால் நீ யெனக்கு அந்த உதவி—உதவியை—செய்ய..." என்பதற்குள்,

தேவதாஸ்:—"செல்வநாதனை யொழித்துவிடவா? ஒரு காலும் முடியாது" என்று உறுதியாய்க் கூறிவிட்டு மாடியினின்றும் இறங்கினன்.

அவன் செல்வநாதன் எதிரிற் சென்றதும் செல்வ நாதன் "இவன் மனதில் ஏதோ கலவரமும் வெறுப்பு முண்டாயிருக்கிறது. உள்ளேயிருக்கும் மனிதர் யாரோ அறியவேண்டும்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண் டான்.

தேவதாஸ் தான் கொண்டுவந்த சிப்பத்தை யவிழ்த்து மேஜைமேல் வைத்தான். செல்வநாதன் "அதென்ன அது?" என்றான். தேவதாஸ், "இவைகள்தான் அச்சிறுவன் களவாடிக்கொண்டு வரப்பட்டபோது அவன் தேகத்தில் அணியப்பட்டிருந்த உடைகள்." என்றுகூறி காற்சட்டை, மேற் சட்டை, போர்வை முதலியவற்றை யெடுத்து செல்வநாத னிட மளித்தான். செல்வநாதன் சந்தோஷ மடைந்து "பேஷ், நீ நல்ல புத்திசாலி" என்றுகூறி நூறு பவுன்களையும் அவனிடம் கொடுத்தான்.

தேவதாஸ் மிக்க சந்தோஷத்தோடு பணத்தை வாங் கிக்கொண்டு செல்வநாதனை சிற்றுண்டி யருந்தும்படி உப சரித்தான். செல்வநாதன் வந்தன மளித்துத் தனக்கொன் றும் தேவையில்லை யென் றியம்பி விட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

54-வது அத்தியாயம்

தேவதாஸின் வீட்டை விட்டுப் புறப்பட்ட செல்வநாதன் உடனே அந்தப் பிரதேசத்தை விட்டுப் போய்விடவில்லை. தேவதாஸின் வீட்டில் தன் எதிரில்வர அஞ்சும் ஆட்கள் யாரோ இருக்கிறார்கள் என்று அவன் புத்தியிற் பட்டுவிட்டது. ஆகையால் "அவர்கள் எப்படியும் வெளியில் வருவார்கள். அவர்கள் யாரென்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆகையால் செல்வநாதன் தேவதாஸின் வீட்டிலிருந்து புறப்பட்டதும் சமீபத்திலிருந்த ஒரு பழைய உடைகள் விற்கும் கடைக்குள் நுழைந்தான். அரைமணி நேரங் கழித்து வீதி வீதியாய்த் திரிந்து நெருப்புக்குச்சி சோப்பு முதலியவை விற்கும் ஒரு கிழவி தன் சரக்குகளைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு தேவதாஸின் கடைக்கெதிரில் எதிர் வாடையில் வந்து நின்றாள்.

வேலையைவிட்டு வீட்டிற்குச் செல்லும் பலர் இக்கிழவி பாபம் யாசகம் செய்கிறாளென் றெண்ணி காசு கொடுத்தார்கள். அந்த ஏழைத் தொழிலாளிகள் காசை வாங்கிக்கொள்ள அக்கிழவிக்குச் சற்றும் பிரியமில்லை. ஆனால் காசை வாங்க மறுத்துவிட்டால் அவள் வேலையே யடியோடு கெட்டுவிடும். அவ்வாறு ஒருமணி நேரம் கழிந்தது.

தேவதாஸின் கடையின் மேலேயே கண் வைத்திருந்த அக்கிழவி இரவு பன்னிரெண்டு மணி யடித்தும் அந்த விடத்தை விட்டுச் செல்லவில்லை. கடைசியில் கடையின் தெருக்கதவு திறக்கப்பட்டதும் தேவதாஸே வெளியில் வந்து ஜாக்கிரதையோடு வீதியின் இருபக்கங்களையும் பார்த்

தான். அப்போது கிழவி மிக்க பரிதாபமான குரலோடு "அய்யா யேதாவது பிச்சை போடுங்கள் தள்ளாத கிழவி" என்றாள். தேவதாஸ் அவள் பேச்சைச் செவியேற்றுக் கொள்ளாமலே வீட்டிற்குள் நுழைந்தான்.

நெருப்புக்குச்சி முதலிய விற்பவள் என்று கூறியிருக்க அவள் எப்படி பிச்சை யெடுப்பாளென்று இதை வாசிக்கும் நண்பர்கள் கருதலாகும். அந்த நாட்டின் சட்டப்படி யாராவது பிச்சை யெடுத்தால் உடனே துரைத்தனத் தொழிற் சாலைக்குக் கொண்டுபோகப் படுவார்கள். அங்கு அவர்களிடம் தகுந்த வேலை வாங்கிக்கொண்டு உண்டி உடையளிப்பார்கள்; அல்லது கூலி கொடுப்பார்கள். அதனால் அந்த நாட்டில் யாசகம் செய்வோர் இம்மாதிரி தீக்குச்சி, சோப், முதலிய ஏதாவது சில்லரைச் சாமான்கள் விற்பவர்கள்போல் அபிநயம் செய்வார்கள்.

சுமார் அரைமணி நேரம் கழித்து தேவதாஸ் வீட்டிலிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்து வீதியின் இரண்டு பக்கங்களையும் பார்த்துவிட்டு மறுபடி வீட்டிற்குள் போய்விட்டாள். வீட்டின் தெருக்கதவு இன்னும் திறந்தபடியே யிருந்தது. வீதியிலுள்ள இராந்தல் வெளிச்சத்தால் அவ்வாறு வந்து சென்றவள் தானப்பன் வைப்பாட்டியா யிருக்கும் காமாட்சி யென்று கிழவி தெரிந்துகொண்டாள்.

வீட்டின் கதவு இன்னும் திறந்தே யிருந்தது. சற்று நேரம் கழிந்து இராசப்பன் வெளியில் வந்தான். அவனும் வீதியின் இருபுறங்களையும் நன்றாய்ப் பார்த்தான். அவனும் வீதியில் யாருமில்லாம லிருக்கிறார்களா வென்றே பார்க்க வந்தான். கிழவி அவனையும் அவன் கருத்தையும் அறிந்துகொண்டாள். என்னமோ விசேஷம் இருக்கிறதென்று அவளுக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. ஆனால் என்ன

விஷயத்தைப் பற்றியதா யிருக்குமென்று சற்றும் புலப்பட வில்லை. ஆயினும் அதென்ன வென்பதைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று கிழவி தீர்மானித்துக் கொண்டதோடு, நாம் இங்கு நின்று வேவு பார்க்க எண்ணியது நற்காலமே யென்று சந்தோஷ மடைந்தாள். நேயர்களே! நாம் கூறு முன்பே அக்கிழவி யாரென்பதை நீங்கள் உணர்ந்துகொண் டிருப்பீர்களென்று நம்புகிறோம்.

இராசப்பன் வீட்டிற்குள் திரும்பிவிட்ட பின் சற்று நேரம் நிர்ச்சந்தடியா யிருந்தது. பிறகு இன்னொரு மனி தன் வெளியில் வந்தான். அவன் நீண்ட அங்கி யணிந்து தன் முழு தேகத்தையும் மறைத்துக்கொண்டு முக்காடும் அணிந்திருந்தான். அவன் வெளியில் வந்ததும் சட்டென்று வீதியை நோக்கியதும் ஒரு நிமிடம்கூடத் தாமதியாது வீதி யின் கீழ்ப்பாகத்தை நோக்கித் துரிதமாய் நடக்கலுற்றான். நமது கிழவி சமீபத்திலேயே நிழலில் நின்றிருந்ததை யவன் பார்க்கவில்லை. கிழவி தட்டென அவன் முன்னுக்குச் சென்று,

"அய்யா! கடவுளுக்காக இந்த ஏழைக்கு ஒரு பிச்சை கொடுங்கோ?" என்று மிக்க ஆயாசத்தோடும் துயரத் தோடும் கேட்டாள். அம்மனிதன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து குரூரமான பார்வையோடும் குரலோடும் "சே! கிழட்டுச் சவமே போ அப்புறம்" என்று கூறிவிட்டு மிகத் துரிதமாய் நடந்து சமீபத்திலிருந்த ஒருசந்தின் வழியாய்த் திரும்பிப் போய்விட்டான்.

நேயர்களே கிழவியைப்போல் மாறுவேட மணிந்திருந்த நமது செல்வநாதன் இதுகாறு மடையாத பிரமிப் படைந்து சற்றுநேரம் அந்த விடத்திலேயே அசைந்து நின்றுவிட்டான். ஏனெனில் அம்மனிதனுடைய குரலில் தனக்குண்டான சந்

தேகத்தோடு, அவன் தலை நிமிர்ந்து தன்னைப் பார்த்தபோது அவன் முகம் நன்ருய்த் தெரிந்துவிட்டது. அம்மனிதன், ஆற்றில் விழுந்து மடிந்தான் என்று தான் நம்பிக்கொண்டிருக்கும் தானப்பனே யென்று அறிந்ததே அவனுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. அவனுடைய முகத்தைக் கண்டதோடு குரலையும் கேட்டதால் அவன் தானப்பனே யென்று அய்யமின்றி தெரிந்துவிட்டது. அதோடு அவன் வெளியில் வருவதற்காக வீதியில் யாருமில்லா திருக்கிருர்களா வென்று தேவதாஸ் முதலிய மூவரும் வந்து ஜாக்கிரதையோடு பார்த்துவிட்டுச் சென்றதை நினைக்கச் சந்தேகத்திற்கு இடமே யில்லை.

செல்வநாதன் உடனே தன் கஷ்டமான நிலைமையை யுணர்ந்தான். உடனே வேடத்தைக் களைந்துவிட்டு ஓடிச் சென்று அவனைப் பிடிக்கலாமாவென்று நினைத்தான். "அந்தப் பிரதேசம் முழுமையும் பரம துஷ்டர்களிருக்குமிட மாதலால் எப்படியும் அவனை மீட்டுக்கொள்வார்கள். போலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவன் வந்திருக்கிருன் என்று எங்கும் வதந்தி யுண்டாய்விடும். பிறகு இத்துஷ்டர்கள் நாம்தான் கிழவியைப்போல் மாறுவேடமணிந்து வந்ததென்று தெரிந்துகொள்வார்கள். தானப்பன் உடனே ஓகோ செல்வநாதன்-நாம் உயிரோடிருப்பது தெரிந்துவிட்டதென்று அறிந்துகொள்வான். பிறகு நம்மிடம் அகப்படாதபடி மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வான். அல்லது ஊரைவிட்டோடிவிடுவான்" என்று தனக்குள் நன்ருய்ச் சிந்தித்துக் கடைசியில் ஒரு தீர்மானம் செய்துகொண்டான். அதாவது இப்போது ஒன்றும் செய்யலாகாது என்று நினைத்துக்கொண்டு கோரய்ப் பழைய உடைகள் விற்கும் இடத்திற்குச் சென்று தன் மாறுவேடத்தைக் களைந்துவிட்டு, தானப்பன் எங்

கெங்கு செல்வாளே அந்த வழிகளிலெல்லாம் ஆள்வைத்துப் பார்ப்பதென்ற எண்ணத்தோடு துரிதமாய்த் தன் வாசஸ் தலத்தை நோக்கிச் சென்றான்.

* * * *

* * *

55-வது அத்தியாயம்.

இப்போது நாம் பாஞ்சால நாட்டிற்குச் சென்ற இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி இவர்களைப்பற்றிக் கவனிப்போம். அவர்களுக்குத் துணையாய் அவர்கள் தாயாருக்கு நெடுநாளாய் அறிமுகமான ஒரு மூதாட்டி மேலுக்குத் துணையாகவும், அந்தரங்கத்தில் காவலாகவும் சென்றாள். அவள் ஒரு கைம்பெண். அவள் பெயர் இராஜம்மாள் அல்லது இராஜம்.

அவள் பிழைப்பிற்கு வழியில்லாதவள். அதோடு தனக்கு வருமானம் கிடைத்தால் போதும், அது கெட்ட வழியாயிருந்தாலும், வேறொருவர்க்கு அநீதம் நடப்பதாயினும், தனக்குக் கெடுதிவராத வரையில் வேறெதையும் கவனிப்பவளல்ல. ஆயினும் இக்கன்னிகைகளைப் பற்றிய பயங்கரமான இரகசியம் முழுமையும் அவளுக்குத் தெரியாது. அவர்கள் இளவரசனுடைய குடும்பத்தில்போய்ச் சேரப் போகிறார்கள் என்று மட்டும் அவளுக்குத் தெரியும். அதோடு கொஞ்சகாலமாய் இளவரசர் இக்கன்னிகைகளின் வீட்டிற்குப் போக்குவரத்தாயிருந்ததும் அவள் அறிவாள். அவள் அநுபவத்தில் மாதரின் கற்பில் அவ்வளவாய் நம்பிக்கையுடையவளல்ல, ஆகையால் அப்பெண்களின் தாயாகிய

மாகதவல்லிக்கும் இளவாசனுக்கும் இருக்கும் நட்பு சாதாரண சினேகிதர் நட்பென்று அவள் கருதவில்லை. ஆகையால் அப்பெண்கள் இராஜ குடும்பத்திலுள்ள அரச குமாரர்களுக்குத் தங்கள் கற்பை யளித்துவிட்டு அதன் பரிசாக இளவாசன் குடும்பத்தில் நல்ல வருமானம் கிடைக்கத் தக்க பதவிகளை யடைந்தார்கள் என்று எண்ணிக்கொண்டாள்.

இராஜம்மாள் ஏற்கனவே விபரீத நடக்கைகளிலெல்லாம் நன்ருய்ப் பழகியவள். அவ்விஷயத்தில் அவள் அப்பெண்களின் தாயாகிய மாகதவல்லி சந்தேகப்பட்டதிலும் பத்தாயிரம் மடங்கு அதிகமாய்ச் சீர்கெட்டவளென்று கூறலாகும். அவள் தன் பாதுகாப்பில் விடப்பட்ட கன்னிகைகளின் வனப்பை விலைக்கு விற்க அஞ்சமாட்டாள். தான் மிக்க சாமர்த்தியமும் தந்திரமு முடையவளென்றும், தன்னை யமர்த்திக்கொண்ட மாகதவல்லி தன்னைப் பூரணமாய் நம்புவதாகவும் அவள் கருதிக்கொண்டிருந்தாள். அவள் தன் பெண்களின் கற்பைப் பாதுகாக்கும்படி தனக்குக் கட்டளையிட்டதைக் கேட்டதே மனதிற்குள் நகைத்துக்கொண்டாள். ஆனால் வெளிக்குப் பெற்ற தாய்போல் அவர்களைப் பாதுகாப்பவள்போல் அபிநயித்துக் கொண்டு உறுதியான பிரமாணிக்கங்களையெல்லாம் கூற மாகதவல்லி திருப்தி யடைந்தாள்.

அவள் உள்ளம் எப்படி சூதா யிருக்கிறதோ அப்படியே அவள் வெளி யுருவமும் முழுதும் சூதானதேயாகும். அவளுக்கு வயது ஐம்பத்தைந்து முதல் அறுபது வரை யிருக்கும். ஆனால் அவள் நரைமயிருக்குச் சாயம் பூசிக்கொண்டு, பொய்ச்சிகை, பொய்ப்பல் முதலியவைகளை வைத்துக்கொண்டு, திரைகளையெல்லாம் பசையாலும் சாயத்தாலும் மறைத்துக்கொண்டு பார்வைக்கு முப்பது வயது

மாதுபோல் தன்னை யாவரும் கருதவேண்டும் என்று வேடம் தரித்துக்கொண்டே அவள் வெளியில் புறப்படுவாள்.

கடைசி சகோதரியாகிய மீனும்பாள் இளவரசன் மனைவிக்கு அக்கிரமமும் அபாண்டமுமான அவமானத்தையும், அவள் ஆயுள் முழுமையும் துக்கத்தையும் உண்டாக்கத் தக்க சதியாலோசனைக்கு உட்படாமல், தன் வரையில் தப்பித்துக் கொண்டாள் என்பதைப்பற்றி முன்னமே கூறி யிருக்கிருேம். ஆகையால் மற்ற மூவர் மட்டும் இராஜம்மாள் வசத்தில் பாஞ்சால நாட்டிற்குச் சென்ருர்கள். அப்பெண்களுக்குக் காண்போர் மனதைக் கவரத்தக்க சேர்த்தியான உடைகளும், ஆபரணங்களும், இன்னும் வேண்டிய சாமான்களும் அனேகம் பெட்டிகளில் அவர்கள்கூட அனுப்பப் பட்டன.

அவர்களுக்கென்றே ஒரு துரைத்தனக் கப்பல் ஆயத்தம் செய்யப்பட்டது. அதில் அவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் அமர்த்தப்பட்டிருந்தன. அக்காலத்தில் புகைக்கப்பல்க ளில்லை. இவர்கள் கப்பலில் ஏறிப் பாஞ்சாலநாட்டின் துறைமுகத்தில் இறங்கினுர்கள். இராஜம்மாள் கடல் வியாதி யடைந்ததால் இவர்கள் துறைமுக நகரத்திலேயே இரண்டு நாட்களாவது தங்கி யிருந்து அவள் பூரண சுக மடைந்த பின்பே பரிதிபுரம் செல்லவேண்டி யிருந்தது.

இவர்கள் புதன்கிழமை புறப்பட்டவர்கள் வியாழக் கிழமை மாலையே துறைமுக நகரம் சேர்ந்தார்கள். அங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை காலையில்தான் பரிதிபுரம் புறப்படத் தீர்மானித்தார்கள். முன் அத்தியாயங்களில் நாம் கூறியபடி, அந்தவார வெள்ளிக்கிழமைதான் ஜகதீசன் மீனும்பாளை கோமளவல்லியிடம் விட்டபின் அவளிடம்

விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவனும் சனிக்கிழமைதான் துறைமுக நகரில் மேற்கண்ட சகோதரிகள் தங்கியிருக்கும் ஹோட்டலில் தானும் தங்கினுன்.

புத்திசாலியும், நற்குணமும், நாணயமுமுடைய அவ் வாலிபன் தான் மீனும்பாளிடம் விடைபெற்றுக்கொண்டு வரும்போது, "நான் எடுத்துக்கொண்ட கஷ்டமானதொழிலை நிறைவேற்றுவதில் என்னுல் கூடியவரையில் உன் சகோதரிகளுக்கு எவ்விதத் துன்பமும் நேரிட ஒட்டாது பார்த்துக் கொள்கிறேன். அதோடு என்னுல் கூடியவரையில் அவர்களுக்கு நற்புத்தி கூறி அவர்களை நல்வழியில் திருப்பப் பார்க்கிறேன்" என்று வாக்களித்து விட்டு வந்தான்.

ஆகையால் அவன் புறப்படும்போதே அச்சகோதரிகள் இளவரசன் குடும்பத்தில்போய்ச் சேர்ந்துவிடு முன் அவர்களை வழியில் சந்திக்க வேண்டுமென்றும், எப்படியாவது அவர்களோடு கூடவே தானும் பிரயாணம் செய்ய வேண்டுமென்றும் அச்சமயத்தில் அவர்களுக்குப் புத்திகூற வேண்டுமென்றும் ஆவல்கொண்டிருந்தான். பிறகுதான் கருதிவந்த நோக்கங்களை விவகாரங்கள் சம்பவிக்கும் சந்தர்ப்பப்படி பார்த்து நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். முடிவாய் எப்படியாயினும் அச்சகோதரிகளை எந்த தந்திரத்திலாவது நல்வழியில் திருப்ப முயல்வதென்றும், அதில் தவறினுல், இளவரசன் மனைவியிடம் "உம்மிடம் தோழிகளாய் அமர்த்தப்பட்டு வரும் தோழிப் பெண்கள் உன்மேல் வேவுகாரிகளாயிருந்து முடிவில் உனக்கு அவமானத்தையும் அழிவையும் உண்டாக்குவதற்காகவே வேணுமென்று அமர்த்தப்பட்டு வருகிருர்கள்" என்று எச்சரிக்கை செய்துவிடவேண்டும் என்பதே அவனுடைய உறுதியான தீர்மானம். அதற்காகவே அவன் புறப்பட்டு வந்தவன்.

அவன் சனிக்கிழமை மாலை ஹோட்டலில் வந்து இறங்கியதே, அச்சகோதரிகளைப் பற்றி விசாரித்து, அவர்கள் அதே ஹோட்டலில் தங்கியிருப்பதைக் கேட்டு மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்தான். அதோடு ஹோட்டல் கணக்கப்பிள்ளையிடம் பக்குவமாய்ப் பேசி அவர்கள் அடுத்தநாள் காலையில் புறப்பட்டு தலைநகர்க்குச் செல்கிறார்கள் என்று அறிந்துகொண்டு மிக்க சந்தோஷமடைந்தான். அவன் உடனே தானும் அதே காலத்தில் புறப்பட ஒரு வண்டி கிடைக்குமாவென்று விசாரித்தான். அது கஷ்டமென்றுணர்ந்தபோது அவன் மனதில் மிக்க வியாகூலமுண்டாய் விட்டது. என்ன செய்வான் பாபம். இவ்வளவு சிரமப்பட்டு வந்தும் கடைசியில் ஒருநாள் அவர்கள் முன்னடி செல்லவிட்டுத் தான் பின் தங்கிவிட்டால் அவர்கள் இளவரசன் குடும்பத்தில் போய்ச் சேர்ந்து விடுவார்கள். பிறகு தன் எண்ணங்கள் நிறைவேறுவது மிக்க கஷ்டமாய் விடும்.

அச்சமயம் பாஞ்சால நாட்டின் தலைநகர்க்கு அதிகப் பிரயாணிகள் வந்துவிட்டபடியால் அவ்வூரிலிருந்த வாடகை வண்டிகள் அனைத்தும் வெளியில் சென்று விட்டனவென்றும் கடைசியாயிருந்த வண்டியே அச்சகோதரிகளுக்கு அமர்த்தப்பட்டதென்றும், சென்ற வண்டிகளில் ஏதாவது திரும்பிவருமாதலால் திங்கட்கிழமை வேண்டுமாயின் உமக்கு வண்டி யமர்த்திக் கொடுக்கிறேனென்று ஹோட்டல்காரன் கூறினான்.

ஜகதீசன் ஹோட்டல்காரனை நோக்கி, "எனக்கு மிக்க அவசரமானதும் அவசியமானதுமாகிய வேலை யிருக்கிறது. ஆகையால் தபால்வண்டி எனக்கு அநுகூலப்படாது. ஆகையால் தனியாய் ஒரு வண்டி வேண்டியது. நான் நாளை காலையே புறப்பட்டு நேராய்ப் பரிதிபுரம்போய்ச் சேரவேண்டும்" என்றான்.

ஹோட்டல்காரன் ஜகதீசன் முகத்தை யுற்று நோக்கி, "ஓகோ! இவ்வாலிபன் நாளை காலை இங்கிருந்து பிரயாணப் படும் அக்கன்னிகைகளோடு செல்ல விரும்புகிறான்போற் காண்கிறது" என்று சந்தேகங்கொண்டு, ஜாடையாகவும் குறிப்பாகவும் தன் அபிப்பிராயத்தை வாலிபன் உணருமாறு செய்தான். அதோடு அவன் கூறிய மாதிரியில் "உனக்கு அவ்வாறு பிரியமிருக்கும் பட்சத்தில் நான் உனக்கு உதவி செய்யக்கூடும்" என்ற கருத்தடங்கி யிருந்தது.

அந்த நாட்டு ஹோட்டல்காரர்கள் சில்லரைக் காசைப் பட்டு அத்தகைய உதவி செய்கிறவர்கள் என்று ஜகதீசன் அறிவான். ஆதலால், "நீ மட்டும் அக்கன்னிகைகள் நாளைக் குச் செல்லும்பொழுது தங்கள் வண்டியிலேயே எனக்கு மட்டும் இடம் தரும்படி ஏற்பாடு செய்துவிடுவாயாகில் உனக்குப் பத்து ரூபாய் நான் பரிசளிப்பதோடு இந்நன் றியை யொருபோதும் மறவேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட ஹோட்டல்காரன் மறுமொழி யொன்றும் கூறாமல் வாலிபனைக் குறிப்பாய் உற்று நோக்கி விட்டுத் துரிதமா யங்கிருந்து புறப்பட்டான்.

அச்சமயம் அக்கன்னிகைகள் போஜன மருந்தும் வேளை ஹோட்டல்காரன் அவர்களுக்கு வட்டித்துக்கொண் டிருக்கையில் இராஜம்மாள் அவனை நோக்கி "நாளை காலை சரியாய் ஒன்பது மணிக்குச் சரியாய் வண்டி வந்து ஆயத் தமா யிருக்கவேண்டும்" என்றாள்.

ஹோட்டல்காரன் மிக்க மரியாதையோடும் நம்பகத் தோடும் அப்படியே செய்வதாய்க் கூறினான். மூதாட்டி யும் அக்கன்னிகைகளும் அவனை நோக்கி "பரிதிபுரம் போகு மட்டும் பாதை நன்றாய்ச் செப்பனிட்ட பாதைதானா? வண்டி இடையூறின்றி துரிதமாய்ச் செல்லக்கூடுமா? வழியில்

எங்கெங்கு நாணயமான நல்ல ஹோட்டல்க ளிருக்கின்றன? அந்த ஹோட்டல்காரர்கள் எப்படிப்பட்டவர்கள்? பாதையில் பிரயாணிகளுக்கு கள்ளரால் ஆபத்து நேரிடுவதுண்டா?" என்பன வாதிய பல கேள்விகளைக் கேட்டார்கள்.

ஹோட்டல்காரன் கடைசியாய் கேட்கப்பட்ட கள்ளரைக் குறித்த கேள்விக்குத் தவிர மற்ற எல்லா கேள்விகளுக்கும் மிக்க திருப்திகரமான விடைகளை யளித்தான். கடைசி கேள்விக்கு விடை கூறும்போதே அச்சத்தோடும் தடுமாற்றத்தோடும் "சமீப காலத்தில் சில பட்டாளங்களை யுடைத்து விட்டபடியால் பல போக்கிரிகள் பாட்டைகளில் பிரயாணிகளைக் கொள்ளையடிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்" என்றான்.

இதோடு "பிரயாணிகள் பல சமயங்களில் வழிமடக்கிக் கொள்ளையடிக்கப்பட் டிருக்கிறார்கள். இரவில் மட்டுமல்ல. சில சமயங்களில் பகலில் செல்லும் பிரயாணிகள் கூட கொள்ளையடிக்கப்பட் டிருக்கிறார்கள். ஆகையால் இக்காலத்தில் ஸ்திரீகள் ஒரு ஆண் துணையோடாவது செல்வதே நலம்" என்று கூறினான்.

இச்சங்கதிகளைக் கேட்டதே இராஜம்மாள் மிக்க மனக் கலக்க மடைந்து "அய்யோ அப்படியாயின் தபால் வண்டியிலாவது செல்லலாமே" என்றாள்.

கன்னிகைகள் தபால் வண்டியில் பலவிதமான மனிதர்களும் ஏறுவார்கள் ஆகையால் அதிற் செல்ல ஒப்பவில்லை.

ஆகையால் இவர்களுக்குள் பெருங் கலக்கம் உண்டாயிற்று. ஹோட்டல் ஆட்காரன் இதுதான் சமயமென்று கருதி அம்மூதாட்டியை நோக்கி,

"அம்மா! இச்சமயம் ஒரு மரியாதையான வாலிபர் இதே ஹோட்டலில் இருக்கிறார். அவர் ஏதோ அவசர

காரியமாய் பருதிபுரத்திற்கே செல்லவேண்டுமாம். வண்டி யகப்படாததால் தத்தளித்துக்கொண் டிருக்கிறார். அவர் மிக்க அழகும் நாணயமும் உடைய பெரிய மனிதராகவே தோற்றப்படுவதால் இத்தகைய சமயத்தில் பிரியமிருந்தால் அவரை யுங்கள் வண்டியிலேயே வரும்படிக் கூறினால் வரு வார்" என்றான்.

கன்னிகைகள் உடனே மிக்க ஆவலோடு அதற்கு ஒப் புக்கொண்டார்கள். இராஜம்மாள் சற்று சிந்தித்து, "ஆம் அவர் உண்மையாகவே பெரிய மனிதராயின் அப்படியே ஏற்பாடு செய்வது நலம்" என்றாள்.

அதன்மேல் ஹோட்டல் ஆள்காரன் ஜெகதீசனிடம் சென்று தான் காரியத்தை நிறைவேற்றிவிட்டதாய்க் கூறி வாக்குத் தத்தத்தின்படி பணத்தை வாங்கிக்கொண்டான்.

பருதி புரத்திற்குப் புறப்படும் தினம் காலைப் போஜனத் திற்கு ஜெகதீசன் அம்மாதர்களோடு காலைப் போஜனம் அருந்தும்படி வேண்டிக்கொள்ளப்பட்டான். மாதர்கள் அவனை மிக்க மரியாதையோடேயே ஏற்றுக்கொண்டார் கள். ஜெகதீசன் அக்கன்னிகைகளின் வனப்பையும் அவர் கள் நாணயமான வார்த்தைகளையும் கேட்டதே அவர்கள் மேல் மிக்க இரக்கம் கொண்டான். அவன் களங்கமற்ற மனதுடையவனாதலால் "அந்தோ! இத்தகைய பெண் கள் இப்படிப்பட்ட அகௌரவமான தொழிலில் பிரவேசிக் கப் போகிறார்களே. இவர்களை யெப்படியோ சூதுவாது தந்திரத்தால் மயக்கி இதற்கு உடன்படும்படிச் செய்து விட்டிருக்கிறார்கள். நாம் இவர்களுக்கு விஷயங்களின் உண் மையையும் இவர்கள் நிலைமையால் நேரிடக்கூடிய ஆபத்தை யும் இவர்களுக்குத் தெரிவித்தால், இவர்களைச் சுலபமாய் அக் கெட்ட வழியிலிருந்து திருப்பிவிடலாமென்று கருதி

ஞன். அழகும் நாணயமுமாகிய தோற்றத்தையுடைய அக்கன்னிகைகளின் மனம் கல்போல் உறுதி யடைந்து எத்தகைய வஞ்சகமும், துரோகமும், தீங்கும்செய்யக்கூடிய நிலைமையிலிருப்பதை யவன் சற்றும் அறிந்துகொள்ளவில்லை.

ஆனால் இராஜம்மாள் என்ற மூதாட்டி விஷயத்திலோ அவனுக்கு வெறுப்பே யுண்டாயிற்று. அவர்கள் கூட்டத்தில் அவன் இருந்த சற்று நேரத்திற்குள் அம்மூதாட்டி மிக்க அயோக்கியமானவளென்றும், அவளால் இக்கன்னிகைகளுக்குச் சற்றும் நன்மை யுண்டாகாதென்றும் அவன் புத்தியிற்பட்டது. ஆயினும் இந்த அபிப்பிராயம் வெளிக்குத் தெரியும்படி செய்துகொள்வது நமது நோக்கத்திற்கு அனுகூலமல்லவென் றுணர்ந்து அதை யடியோடு தன் மனதிலேயே மறைத்து வைத்துக்கொண்டான்.

ஜெகதீசன் விஷயத்தில் அம்மாதர்களோ மிக்க பிரியங் கொண்டார்கள். அவன் வனப்பையும் நாகரீகமும் இனிமையுமான சம்பாஷணையையும் குளிர்ந்த சாந்தமும் சந்தோஷமுமான முகத்தையும் கண்டதே அக்கன்னிகைகள் அவன் விஷயத்தில் மிக்க சந்தோஷமும் திருப்தியு மடைந்தார்கள். இராஜாம்மாள் என்ற மூதாட்டியோ, அக்கன்னிகைகளுக்கு மனச்சோர்வு வுண்டாகாமல் அவர்களைச் சந்தோஷத்தோடு இளவரசியிடம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டிய ஒரே கடமையும் நாட்டமு முடையவளாகையால், கன்னிகைகளுக்குப் பிரியமான அழகு வாய்ந்த நாகரீக முடைய வாலிபன் துணையாய்ச் சிக்கினதே போதுமென்று திருப்தி யடைந்திருந்தாள்.

அவர்கள் போஜனம் முடிவதற்குள் வண்டி ஆயத்தமாய்விட்டது. ஆகையால் போஜன வேலையானதே பிரயாணத்திற்கு ஆயத்தப்பட்டார்கள். அந்தவண்டிக்குள் தாராள

மாய் ஆறுபேர் உட்காரலாம். ஒருபக்கமுள்ள ஆசனத்தில் மூதாட்டியும் மூன்ருவது சகோதரியாகிய ஜானகியும் உட்கார்ந்து கொண்டார்கள். எதிரிலுள்ள ஆசனத்தில் இரங்கம்மாள் அம்புஜம் என்ற இரண்டு மூத்த சகோதரிகளும் அவர்களுக் கிடையில் ஜெகதீசனும் உட்கார்ந்து கொண்டார்கள். வண்டி யுடனே புறப்பட்டது.

56 - வது அத்தியாயம்.

வண்டி நகரைவிட்டுத் தாண்டியதே அவர்கள் தேசாசாரப்படி வாலிபக் கன்னிகைகளாயினும் அன்னிய புருடர்களிடம் தாராளமாய்ச் சம்பாஷிக்கலாம். ஆகையால் யாவரும் வண்டியில் தாராளமாய்ச் சம்பாஷிக்கத் தொடங்கினர்கள்.

யாவரும் பேசிக்கொண்டிருக்கையில் மூதாட்டி நாங்கள் வழியில் பருதிபுரத்தில் தங்கி, அங்கிருந்து, தங்கள் நாட்டு இளவரசி தங்கி யிருக்கும் நகரத்திற்குச் செல்வதாகவும், தன்னேடுவரும் கன்னிகைகள் இளவரசியிடம் தோழிகளாய்ச் செல்வதாகவும் கூறினள். ஜகதீசன் "நானும் அதே நகரத்திற்கே வர்த்தக விஷயமாய்ச் செல்கிறேன். அதோடு பருதிபுரத்திலும் கொஞ்சம் வேலே யிருக்கிறது. அங்கும் நான் ஒருநாள் இரண்டுநாள் தங்கவேண்டிய வேலே யிருக்கிறது" என்றுன்.

இதைக் கேட்டதே மூத்த சகோதரியாகிய இரங்கநாயகி மிக்க சந்தோஷத்தோடு "நாங்கள்கூட பருதிபுரத்தில் இரண்டு நாட்கள் தங்கப்போகிருேம்" என்ருள்.

ஜக:—"அப்படியாயின் பருதிபுரத்திலுள்ள எல்லாக் காட்சிகளையும் நான் உங்களுக்குக் காட்டக்கூடும். அதோடு நீங்கள் போகும் நகரம் வரையில் நான் உங்களுக்குத் துணைவரக் கூடியவனு யிருப்பதற்காக மிக்க சந்தோஷமடைகிறேன்" என்முன்.

ஆனுல் ஜகதீசன் மனதில் ஒருவிதக் கலக்க முண்டாயிற்று. அதாவது, இரங்கநாயகி தன்னிடம் பேசிய மாதிரியில் அவள் தன்மேல் மரியாதைக்கு மீறிய அன்புகாட்டுவதாய் அவன் மனதிற்பட்டது. அவன் மறுபடி அவள் முகத்தை நோக்கிச் சற்று அன்புகாட்டும் வார்த்தைகளையுபயோகித்தான். அதனுல் அவள் மனச்சந்தோஷ மடைந்தாளேயொழிய சற்றேனும் நாணமடையவில்லை. இதனுல் அவள் நடக்கையைப்பற்றி யவன் மனதில் அதிருப்தி யுண்டாய் விட்டது.

இரங்கநாயகி மட்டுமல்ல. மற்ற கன்னிகைகளும் ஜகதீசன் தங்களோடு கூடவே வருகிற சங்கதியைக் கேள்விப்பட்டதே மிக்க சந்தோஷமடைந்தார்கள். அன்று பகல் இவர்கள் ஒரு விடத்தில் தங்கி போஜனம் செய்துகொண்டு மறுபடி பிரயாணத்தைத் தொடங்கினுர்கள். மாலைப் போதுக்குள் கன்னிகைகள் ஜகதீசனிடம் நெடுநாள் பழகிய சிநேகிதர்கள் போலாய்விட்டார்கள். வழியில் மூத்த சகோதரியாகிய இரங்கம்மாளைப்போலவே இரண்டாவது சகோதரியாகிய அம்புஜம் என்பவளும் தன்னிடம் அளவுமீறிய நட்பு காட்டுகிறுளென்று ஜெகதீசன் உணர்ந்து கொண்டான். அவன் மனதில் மிக்க வெறுப்புண்டாய்விட்டது. இவர்கள் கடைசி தங்கையாகிய மீனும்பாள் கூறிய விஷயங்கள் அவன் நினைப்பிற்கு வந்தன. அதாவது அவர்கள் துஷ்டத்தாய் அவர்களைப் பயிற்சிசெய்த மாதிரியாலும், அவர்க

ளுக்குப் போதித்த விஷயங்களாலும் அவர்களுடைய அச்சம், மடம் நாணம் முதலிய கற்பின் வேலிகளெல்லாம் அழிந்து போயினவென்று எண்ணிக்கொண்டான்.

அவர்கள் அன்றிரவு ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து மறுநாட் காலை பிரயாணத்தைத் தொடங்கினார்கள். பாதையில் மூதாட்டி வண்டியின் ஓர் மூலையில் சாய்ந்து உறங்கினாள். ஜெகதீசன் இதுதான் சமயமென்று மெதுவாய் இளவரசியைப்பற்றி பேசத்தொடங்கி, "அவர்களுக்குப் பிறந்திருக்கும் பெண் குழந்தையைக் கருதியாவது கணவனும் மனைவியும் தங்கள் மனஸ்தாபத்தை யொழித்துவிட்டு ஒருமித்து வாழலாகாதா?" என்றான்.

சகோதரிகள் அவ்விஷயத்தில் மனமொத்து கலந்து பேசவில்லை. இரங்கம்மாள், "நாம் இதைவிட்டு வேறே எந்த சங்கதியாவது பேசலாம். இச்சங்கதி நாங்கள் பேசிப்பேசிப் பழசாய்விட்டது" என்றாள். அதன்மேல் ஜெகதீசன் அச்சமயம் அச்சம்பாஷணையை நிறுத்திவிட நேர்ந்தது. அவர்கள் இயற்கையில் நல்ல குணங்களையே யுடைத்தா யிருந்தவர்களென்று ஜெகதீசன் உணர்ந்துகொண்டான். ஆதலால், "அந்தோ! இவர்களை நல்வழியிற் பயிற்சிசெய்திருந்தால் எத்தகைய கௌரவம் பொருந்திய அந்தஸ்திற்கும் தகுதி யுடையவர்களாய் கெம்பீரத்தோடு பிரகாசிப்பார்களே! இப்போது இவர்கள் எண்ணங்களும், ஆவல்களும், நோக்கங்களும் எத்தகைய இழிவான நிலைமைக்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறதோ? இவர்கள் கற்பின் நிலைமை எப்படி யிருக்கிறதோ? கற்பின் உயர்வைப்பற்றி இவர்கள் எவ்வளவு அலட்சியமாய் மதிக்கும் வண்ணம் கற்பிக்கப்பட் டிருக்கிறார்கள். இப்போது மனதில் நினைத்தாலும் நடுக்கமுண்டாகத் தக்க தொழிலைச்செய்யத் துணிந்து தாங்கள் அழிவடையும் பாதை

யில் வேகமாய்ச் செல்கிறார்களே!" என்று தனக்குள் மிக்க வியாகூலத்தோடு சிந்தித்துக் கொண்டான்.

உண்மையில் அவர்களுடைய நடையுடை பாவனைகளும் சம்பாஷணை முதலிய எல்லா வெளித்தோற்றங்களும் அவர்கள் நாகரீகமும் கௌரவமும் பொருந்திய மிக்க உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் கூட்டத்தில் புழங்கப் பூரண தகுதி யுடையவர்களென்றே காட்டின. ஆனால் அந்தோ! அவர்களுடைய சிந்தனைகளும், நாட்டங்களுமாகிய மனதைச் சேர்ந்த குணங்களோ நேர்மாறாக மிக்க தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப்பட் டிருக்கின்றன.

ஜெகதீசன் இரண்டு மூத்த சகோதரிகளின் குணங்களைக் கண்டபின் அவர்களின் கூட்டத்தில் இருப்பது அவனுக்கு மிக்க வெறுப்பா யிருந்தது. ஒன்று அவர்களை விட்டுப் பிரிந்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் தான் மீனம்பாளுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தின்படி நடக்க முடியாது. நெடுநேரம் சிந்தித்துக் கடைசியில் எப்படியாயினும் சகித்துக்கொண்டு இச்சகோதரிகளைத் தங்கள் துஷ்ட வழியிலிருந்து திருப்பிவிட முயல்வதே நமக்குக் கௌரவம் என்று கருதினான்.

கடைசியில் அவர்கள் பருதிபுரம் போய்ச் சேரும்போது இரவு ஒன்பதுமணி யிருக்கும். பிரயாண அலுப்பால் யாவரும் போஜனம் செய்ததே சயனித்துக்கொண்டார்கள். ஜகதீசன்மட்டும் தனக்கு எவ்வளவு ஆயாசமா யிருப்பினும் அதைச் சமாளித்துக்கொண்டு தன் காதலியாகிய கோமளவல்லிக்கு விவரமாய்க் கடிதம் எழுதினான். இவர்கள் யாவரும் ஒரு முதல்தரமான ஹோட்டலில் தங்கி யிருந்தார்கள்.

நேயர்களே பிறகு நடந்த விவகாரங்களை நாம் இங்கு விவரமாய்க் கூறினால் நமது நாட்டுச் சகோதரிகள் வாசிக்

க்கூடிய யோக்யதையை நமது நாவல் இழந்துவிடும். ஆகை யால் நமது கதைக்கு அவசியமாய் வேண்டிய மட்டும் சுருக்கமாய்க் கூறுகிறோம்.

மறுநாட் காலை மூத்த சகோதரிகள் இருவரும் சம்பாஷித்தபோது தாங்கள் ஜெகதீசனை மயக்கச்செய்த முயற்சியைப் பற்றி தாராளமாய் நாணமின்றிப் பேசிக்கொண்டார்கள். அவன் தங்கள் மாயவலைக்குச் சிக்காத உறுதியான நன்னெறி யுடையவனென்று அவர்கள் புத்தியிற்பட்டது. அப்படி யிருந்தும் முதலில் மூத்தவளாகிய இரங்கம்மாள் அவனை மயக்கத் தன் சாமார்த்தியத்தைக் காட்டி முயல்வதென்றும், அவளால் முடியாவிட்டால் பிறகு இரண்டாவது சகோதரியாகிய அம்புஜம் முயற்சி செய்வதென்றும் தங்களுக்குள் முறைபோட்டுக் கொண்டார்கள். இதற்காக மறுநாள் அம்புஜம் மூதாட்டியையும் கடைசி சகோதரியாகிய ஜானகியையும் எந்த சாக்காவது கூறி வெளியில் நகரின் வேடிக்கைகளைப் பார்க்க அழைத்துச் செல்வதென்றும், அச்சமயம் மூத்த சகோதரி தலைவலி யென்று ஹோட்டலிலேயே நின்றுவிட்டு ஜகதீசனைத் தன் வலையில் சிக்கச்செய்ய முயல்வதென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

இவர்கள் சம்பாஷணை முடியும் சமயம் மூன்றுவது சகோதரியாகிய ஜானகி அவர்களிருக்கும் அறைக்குள் வந்தாள். அவள் வந்ததும் தன் தமக்கைகளை நோக்கி,

"நம்மோடு வந்திருக்கும் ஜெகதீசன் என்ற வாலிபனைப் பற்றி யுங்களுடைய அபிப்பிராயமென்ன வென்பதைக் கேட்கவே மிக்க ஆவலோடு நான் இப்போது வந்தேன்" என்றாள். சகோதரிகள் களங்கமாவது நாணமாவது கொஞ்சமுமின்றித் தாங்கள் இருவரும் அவனைத் தங்கள் பழைய காதலரினும் மிக்க அழகுவாய்ந்தவனாகக் கருதித் தங்கள் காதலுக் குட்படுத்த முயன்றதை விவரமாய்க் கூறினார்கள்.

கடைசியில் மூவரும் யாவும் கலந்து பேசியபின் மூத்த சகோதரிகள் இருவரும் ஒவ்வொருவராய் ஜகதீசனை மயக்க முயல்வதென்றும் அவர்கள் இருவரும் தங்கள் முயற்சியில் ஜெயமடையாவிட்டால் கடைசியில் மூன்றுவது சகோதரி யாகிய ஜானகி அவனை மயக்க முயல்வதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

அந்த ஏற்பாட்டின்படியே அன்று மாலை இளைய சகோதரிகள் இருவரும் மூதாட்டியோடு அந்நகரிலுள்ள காட்டு மிருகக் காக்ஷியைக் காணச்சென்றுர்கள். மூத்த சகோதரி யாகிய இராங்கம்மாள் மட்டும் தனக்குத் தலைவலியா யிருக்கிறதென்று சாக்குகூறி ஹோட்டலிலேயே நின்றுவிட்டாள்.

மற்ற மாதர்கள் ஹோட்டலைவிட்டு வெளிச்சென்ற கால்மணி நேரத்திற்குப் பின் இராங்கம்மாள் தன் அறையை விட்டு ஜகதீசன் உட்கார்ந்திருந்த அறைக்கு வந்தாள். மற்றபேர் வெளியிற் சென்றதும், இராங்கம்மாள் மட்டும் தனியாயிருப்பதும் ஜகதீசன் அறிவான். ஆகையால் அவளைக் கண்டதும், "ஆ தலைவலி இப்போது எப்படி யிருக்கிறது?" என்றுன். இராங்கம்மாள் புன்னகையோடு "சுமாரா யிருக்கிறது. ஆயினும் தனியே அறையில் உட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை" என்றுள்.

அவள் கண்களில் காதற்றீ பிரகாசித்தது. இச் சமயம் ஜகதீசனிடம் தனியே தாராளமாய்ச் சம்பாஷிக்கலாமாதலால் எப்படியாவது வாலிபனுகிய இவனை மயக்கிவிடலாம் என்று நம்பி யிருந்தாள். இருவரும் பிரயாணத்தால் நேர்ந்த சுக துக்கங்களைப்பற்றி சற்றுநேரம் பேசியதும் ஜகதீசன் அவளை நோக்கி "நான் நீ தனியாயிருக்கும் சந்தர்ப்பத்தை யறிந்தே வெளியிற் செல்லாமல் தங்கிவிட்டேன். உன்னிடம்

தனியே ஒரு சங்கதி பேசவேண்டுமென்று மிக்க ஆவல் கொண்டிருக்கிறேன்..." என்றதே,

இரங்கம்மாள் முகத்தில் மிக்க சந்தோஷக்குறி யுண்டா யிற்று. அவள் கண்கள் அதிகமாய்ப் பிரகாசித்தன. அவள் முகக் குறியையும் நாணம் நீங்கிய செய்கைகளையும் கண்ட ஜகதீசன், தன் வார்த்தைகளை யவள் தவறாய் அர்த்தம் செய்துகொண்டாள் என்று அறிந்துகொண்டான். அவள் உண்மையாகவே தன் மனநாட்டத்தின் படிக்கே அவன் வார்த்தைகளை அர்த்தம் செய்துகொண்டாள். அதாவது, தான் அவன்மேல் காதல்கொண் டிருப்பதுபோல் அவனும் உள்ளத்தில் தன்மேல் விருப்பம்கொண் டிருக்கிறானென்றும் இச்சமயம் அதைத் தனக்கு அறிவிக்கவே சமயத்தை யெதிர் பார்த்துக்கொண் டிருக்கிறானென்றும் எண்ணிக் கொண்டாள். அதனாற்றான் அவன் மொழிகளைக் கேட் டதே யவளுக்கு மிக்க சந்தோஷ முண்டாய்விட்டது. நமது எண்ணம் மிக்க சுலபமாய் நிறைவேறிவிடும் என்று கருதிக்கொண்டாள்.

அவள் கருத்தை யுணர்ந்த ஜகதீசன் சட்டென்று அவள் முகத்தை யுற்று நோக்கி,

"இரங்கம்மாள்! நான் கூறுவதை யவசரப்பட்டு தப்பு அர்த்தம் செய்துகொள்ளாதே. நான் இதுகாறும் ஒருவித சூதாகவே நடந்துவந்தேன். ஆனால் ஒருவர்க்கும் தீங்கு செய்யவேண்டுமென்ற கருத்தைக்கொண்டு அப்படிச்செய்ய வில்லை. ஆயினும் யாவற்றையும் வெளிப்படையாய்க் கூற வேண்டிய சமயம் கிட்டிவிட்டது. நான் உங்களோடு பிர யாணம் செய்தது தற்செயலாய் நேர்ந்த சம்பவம்போல் தோன்றினும் உண்மை யப்படியல்ல. நான் ஒரு விஷயத் தைப்பற்றி யுங்களோடு பேசவேண்டுமென்ற எண்ணத்தோ

டேயே அப்படிச் செய்தேன். நான் பேசவேண்டிய விஷயம் பெரிய விவகாரம்'' என்று கூறினன்.

அச்சமயம் அவனுக்குத் தன்மேல் சற்றேனும் காதலில்லை யென்றும், அவனை மயக்க முயல்வது சாத்தியமாகக் கூடிய காரிய மல்லவென்றும் மட்டுமே முதலில் அவள் மனதிற்பட்டது. உடனே அவளுக்கு ஜகதீசன் மேல் வெறுப்பும் கோபமும் உண்டாய்விட்டது. அவள் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறியது. இன்னது விடையளிப்பதென்று அவள் மனதிற்குப் புலப்படவில்லை. அதற்குள், ஏதோ ஒரு சங்கதியைப் பற்றி பேசுவதற்காக வேணுமென்றே தங்களோடுகூட பிரயாணம் செய்வதாய் அவன் கூறியது நினைவிற்கு வந்ததும் அவள் மனதில் கலவர முண்டாய்விட்டது. கடைசியில் மனதை யொருவாறு திடப்படுத்திக்கொண்டு "இப்போது நான் எந்தப் பெரிய விவகாரத்தைப் பற்றியும் பேசத்தக்க நிலைமையிலில்லை'' என்றாள்.

ஜகதீசன்:—"உன் கடைசி சகோதரியாகிய மீனும்பாள் எனக்குத் தெரியுமென்று கூறினல், அப்போதுகூட என் சங்கதியைக் கேட்கப் பிரியப்படமாட்டாயோ.'' என்றான்.

இதைக் கேட்டதே இரங்கம்மாள் திடுக்கிட்டுவிட்டாள். அவள் மனதில் ஏககாலத்தில் பல கலவரங்களுதித்தன. அவள் அதைக் கேட்டதும் "ஹா! அப்படியா?'' என்றாள். உடனே வேறொன்றும் கூற அவளால் முடியவில்லை.

ஜகதீசன்:—ஆம். நான் மீனும்பாளைக் கண்டு பேசினேன். அவள் எல்லா சங்கதிகளையும் கூறினள். ஆம். எல்லா இரகசியங்களும் எனக்குத் தெரியும். அவள் கோரிக்கையின் படிக்கும் அவளுக்கு நான் அளித்த வாக்குத்

தத்தத்தை நிறைவேற்றவுமே நான் துரிதமாய்ப் புறப்பட்டு வந்து உங்களைச் சந்தித்தேன்; நீங்கள் பிரவேசிக்கப் போகும் தொழிலால் உங்களுக்கு எவ்வளவு ஆபத்து நேரிடு மென்பதையும், நிரபராதியும் பரிதாபமுமான அந்த இளவரசிக்கு நீங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் தீங்கு எவ்வளவு விபரீதமும் கொடுமையு மானதென்றும் அதனால் உங்களுக்கு எத்தகைய பாபம் உண்டாகு மென்பதையும் உங்கள் மனதிற்கு நன்ருய் விளங்கும்படி எடுத்துக் கூறி யுங்களை யப்பாதகமான வழியிற் செல்லவொட்டாது திருப்பவேண்டு மென்றே நான் வந்தேன். நீங்களோ, ஒரு இளவரசி, உங்களுக்கு எள்ளளவு கெடுதியும் செய்யாதவள், பூரண நிரபராதி, அப்படிப்பட்டவளை அவள் இறக்கு மட்டும் தீராத் துயரத்திலும் அவமானத்திலும் அழுந்தி வேதனைப்படும்படி அவளுக்குக் கேட்போர் நெஞ்சு நடுங்கும்படியான பெருந் தீங்கை விளைவிக்க உத்தேசித்திருக்கிறீர்கள். இதனுல் நீங்களும் பெரும் பாதகம் தேடிக்கொள்ளப் போகிறீர்கள்'' என்ருன்.

இதை யாவுங் கேட்ட இரங்கம்மாள் சொல்லொணுக் கலவரமும் திகிலுமடைந்து "குலத்துரோகி, சண்டாளி! எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டாள். அவள் எங்கே யிருக்கிருள்?'' என்ருள்.

ஜகதீசன்:—மீனும்பாள் துறைமுக நகரத்தில் உங்களை விட்டுப பிரிந்தபின் மறுநாள் அவளைத் தற்செயலாய் இரத்தினபுரி நகரத்தின் ஒரு வீதியில் சந்தித்தேன். இப்போதவள் மரியாதையும் கௌரவமுமான ஒரு மாதின் பாதுகாப்பிலேயே யிருக்கிருள். நான் உங்களுக்குப் புதிதா

யிருந்தாலும் இரண்டு நாட்களாயாவது உங்கள் சக வாசத்திலிருந்து வருகிறேன். என்னுடைய யோக்கியதையைப் பற்றி நீ பொருவாறு அறிந்துகொண்டிருக்கலாகும். நாங்கள் உங்களை யிழிவான நடவடிக்கை யுடையவர்களாய்க் கருத என் மனதிற்குச் சற்றும் ஒப்பவேயில்லை. பிறரால் தூண்டப்பட்டதாலேயே இத்தகைய அக்கிரமச் செய்கைக்கு நீங்கள் ஒப்பிக்கொண்டிருக்கிறீர்கள். ஆயினும் உங்களைப் போன்ற இன்னொரு மாதிற்கு இத்தகைய பெருந்தீங்கைச் செய்ய உங்கள் மனம் துணியுமென்று நான் கருதவில்லை. ஆகையால் இதைப்பற்றி தீர்க்காலோசனை செய்யும்படிக்கும் உங்கள் கௌரவத்தையும் நற்பெயரையும் சிந்தித்துப் பார்க்கும்படிக்கும் உங்களை மிகவும் வேண்டிக்கொள்கிறேன்.'' என்றான்.

இரங்கம்மாள் தான் கூறுவது இன்னதென்றே அறியாமல் "அப்படியாயின் நீர் என்னை என்னசெய்யச் சொல்கிறீர்?" என்றாள்

ஜகதீசன்:—"இப்போது நீங்கள் உத்தேசித்திருக்கும் சதியாலோசனையிலிருந்து நீ விலகிவிட்டால் நான் உன்னையென் சகோதரியாகவே கருதி அப்படியே நேசிப்பேன்" என்றான்.

இரங்கம்மாள்:—சகோதரிபோல் என்ற வார்த்தைக்கு ஒரு அளவில்லை. வேறொருவிதமாய்க் கூறினால் நான் உமது ஏற்பாட்டிற்கு உடன்படக்கூடும். அதற்குத் தக்க பாஷையும் வேறிருக்கிறது.'' என்றாள்.

ஜகதீசன் அவள் வார்த்தைகளின் கருத்தை யறிந்து கொண்டான். அவன் அவளை யுற்று நோக்கி "தயவுசெய்து இத்தகைய சம்பாஷணை வேண்டாம். நீ கூறுவதை நான்

அறியாதவன்போல் அபிநயம் செய்யமாட்டேன். அதனுல் வீண்கால காரணமாகுமே யன்றி வேறில்லை. நான் உண்மை யைக் கூறிவிடுகிறேன். நான் மிக்க யோக்யவதியாகிய ஒரு மாதை மணம்புரிய ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறேன். அவள் கற்புடைய மாதர்க் கிருக்கவேண்டிய நற்குணங்க ளனைத்தும் பூரணமா யுடையவள். எனக்கு என்னதான் நேர்வதாயினும் அவளுக்குத் துரோகமாகிய எந்த விஷயத் தையும் நான் செய்யவும் மாட்டேன் கருதவும் மாட்டேன். இது சத்தியமான மொழி" என்ருன்.

இரங்கம்மாள்:—நீர் ஒரு குருவைப்போல் நன்ருய்ப் பிரசங் கம் செய்கிறீர். ஆனுல் நான் கூறியதால் நான் உம்மை மணம்புரிந்து கொள்ளக் கருதுவதாய்த் தாங்கள் தப்பு அர்த்தம் செய்துக்கொள்ளவேண்டாம்.

ஜகதீசன்:—எப்படியாயினும் நான் கூறியது ஒரு அர்த் தமே.

இரங்க:—நான் உமது ஏற்பாட்டிற்கு இசையாததா யிருந் தால் அப்போது நீர் என்னசெய்ய உத்தேசிக்கிறீர்?

ஜகதீசன்:—அப்படியாயின் நான் நேராய் இளவரசியைக் கண்டு எச்சரிக்கை செய்யவேண்டியதே.

இரங்க:—அய்யையோ! தாங்கள் அவ்வளவு தூரத்திற்குச் செல்லலாகாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜக:—வேறு வழியாய் என் நோக்கம் நிறைவேறிவிட்டால் நான் கட்டாயம் இளவரசியைக் கண்டு எச்சரிக்கை செய்தே தீரவேண்டும். ஆகையால் நீங்கள் பெரிய மனது செய்து என்னை அவ்வளவு தூரம் கஷ்ட மெடுத்துக் கொள்ளும்படி விடமாட்டீர்களென்று நம்பு கிறேன்.

இவை யாவும் கேட்ட அம்மாது தன் உள்ளத்தில் வெறுப்பும் கோபமுமே யுண்டாயிருந்தாலும் தன் மனதிற்குள் ஏதோ சிந்தனை செய்துக்கொண்டு, "அப்படியாயினும் இவ்விஷயத்தில் நான் என் சகோதரிகளையும் அம்மூதாட்டியையும் நிக்ரகித்து ஒன்றும் செய்யலாகாது. ஆகையால் அவர்களோடு கலந்துபேசித் தான் இதைப்பற்றி முடிவு செய்யவேண்டும்" என்றாள்.

ஜக:—எவ்வளவு காலம் அதைப்பற்றி யோசிக்கவேண்டுமோ யோசியுங்கள். நான் வேண்டுமாயின் அதுகாறும் வேறு ஹோட்டலுக்குச் சென்றிருக்கிறேன்.

இரங்கநாயகிக்கு அவன்மேல் எவ்வளவு வெறுப்பாயினும், அவனைப் பிரிந்திருக்க மனம் வரவில்லை. ஆகையால் "வேண்டாம் வேண்டாம். அப்படிச் செய்தால் தங்கள் மேல் சந்தேக முண்டாகும்" என்றாள்.

ஜகதீசன் இவள் தன் பிரியத்திற் கிணங்கி மற்ற பேர்களையும் அவ்வாறே சம்மதிக்கச் செய்வாள் என்று நம்பிக் கொண்டு "உன் பிரியத்திற்கு மாறாக ஒன்றும் செய்யேன் இனி நான் சற்றுநேரம் வெளியிற் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு அவ்வாறே வெளியிற் சென்றான்,

நேயர்களே! சாதாரணமாய் மனிதர்கள் தம்மைப் போலவே மற்ற பேரையும் நினைத்துக்கொள்வது. அது போலவே ஜகதீசன் மனதில் ஒன்றும் ஒளிக்ககாமல் உண்மையை யப்படியே கூறிவிட்டான். அந்தோ சூதும் வாதும் நயவஞ்சகமும் நிறைந்த அத்துஷ்ட மாதர்களின் குணத்தைக் கவனிக்காமல் அம்மாதிரி உண்மையைக் களங்கமின்றி கூறிவிட்டான். யாராரிடத்தில் அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதையும், யாராரிடத்தில் அப்படி நடந்து

கொண்டால் நமக்கே கெடுதியாய் முடியுமென்பதையும் சிந்திக்காமற் போய்விட்டான்.

---

57 - வது அத்தியாயம்.

ஜகதீசன் ஹோட்டலை விட்டுச் சென்ற சற்றுநேரத்திற்குள் இரங்கம்மாளின் இரண்டு சகோதரிகளும் மூதாட்டியும் ஹோட்டலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். இரங்கம்மாள் தனக்கும் ஜகதீசனுக்கும் நடந்த சங்கதியைக் கூறக் கேட்டதே யவர்களுக்குண்டான துயரமும், திகிலும் சொல்லத்தரமல்ல. அவர்கள் இன்னது செய்வதென்று தோன்றுமல் பிரமை யடைந்துவிட்டார்கள்.

ஆனல் உலக அனுபவமும் இத்தகைய விஷயங்களில் நல்ல பழக்கமுமுடைய அம்மூதாட்டி சற்று நேரத்திற்குள் தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு கன்னிகைகளைநோக்கி, "இப்போது நாம் எண்ணிவந்ததுபோல் ஏற்பாட்டின்படி நடந்துகொள்ளாமல் திரும்பிச் சென்றுலோ இளவாசனுக்குக் கொடிய விரோதியாய்விடுவோம். இளவரசியும் நீங்கள் தன்னை யலட்சியம் செய்துவிட்டதாய்க் கருதி மிக்க வெறுப்பும் கோபமு மடைவாள். நாம் இங்கிருந்து திரும்பி உங்கள் தாயாரிடம் சென்றுல் அந்தம்மாள் நம்மை வீட்டுக்குள்ளவே சேர்க்கமாட்டாள். கடைசியில் அவளுக்கும் நமக்கும் பூரண அழிவே நேரிடுவது நிச்சயம். ஆகையால் நாம் இதைக்கைவிட்டுச் செல்லவென்னமோ முடியாது. இப்போது மணி ஐந்தாகிறது. நாம் போஜனம் செய்வது ஆறு மணிக்கு மேல். இடையிலுள்ள ஒருமணி நேரத்தில் எவ்வளவோ வேலைசெய்யலாம். இப்போது நாம் துரிதமாய்

இளவரசி யிருக்குமிடத்திற்குச் செல்லலாகாது. அப்படிச் செய்தால் ஜகதீசன் நமக்குமுன் சென்று இளவரசிக்கு எச்சரிக்கை செய்துவிடுவான். ஆகையால் நான் கூறுகிறவரை நாம் இதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு இங்கேயே யிருப்பதாய் அவனுக்குத் தோன்றவேண்டும். மற்றபடி நடக்கிற நமது சங்கதி யவனுக்குத் தெரியலாகாது" என்று கூறி விட்டு, இரங்கம்மாளை நோக்கி,

"நீ யுடனே உன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். அதில் நடந்த சங்கதியை யெழுதி அந்தம்மாள் யோசனையைத் தெரிவித்தால் அப்படியே நடந்துகொள்வதாயும், கடிதத்திற்குப் பதில் வருமட்டும் நாம் இங்கேயே தங்கி யிருப்பதாகவும் எழுதவேண்டும். அதற்கிடையில் நான் சென்று ஹோட்டல் முதலாளியைக் கண்டு கடிதம் கொண்டுபோக ஒரு ஆளை யேற்படுத்திக்கொண்டு வருகிறேன்" என்று கூறிச் சென்றாள். இரண்டாவது சகோதரியாகிய அம்புஜம் "சரி, இனி என் முறை தான்; நான் அவனை என் வலையிற் சிக்கும்படி முயற்சி செய்யலாம்" என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

இரங்கம்மாள் உடனே யுட்கார்ந்து தன் தாய்க்குக் கடிதம் எழுதினாள். அரைமணிக்குள் மூதாட்டி கடிதம் கொண்டு போவதற்கு ஒரு ஆளை யமர்த்தி அழைத்துக்கொண்டு வந்தாள். அம்மனிதனிடம் அக்கடிதம் உடனே கொடுத்தனுப்பப்பட்டது.

மாலை ஆறுமணிக்கு யாவரும் போஜனத்திற்கு உட்கார்ந்தார்கள். ஜெகதீசனும் அவர்கள்கூட உட்கார்ந்து போஜன மருந்தினான். மூதாட்டியும் சகோதரிகளும் உற்சாகக் குறைவாய் முகவாட்டத்தோ டிருப்பதைக் கண்டான். அன்றுகாலம் கழிந்து மறுநாளும் கழிந்துகொண்

டிருந்தது. ஜகதீசன் இனியாவது நாம் இவர்கள் தீர்மானத்தின் முடிவை யின்னதென் றறிந்துகொள்ள வேண்டுமென்று கருதினன். அவன் அவ்வாறே இரங்கம்மாளைத் தனியாய்ச் சந்தித்துக் கேட்டபோது, அவள் நாளையதினம் கட்டாயம் முடிவு கூறுவதா யியம்பினுள். ஜகதீசனுக்கு முன்னமே யிவர்கள் விஷயத்தில் சந்தேகம். ஆகையால் இவர்கள் தங்கள் தாய்க்கு இதைப்பற்றி யெழுதி, அவள் அபிப்பிராயத்தையும் கட்டளைகளையும் எதிர்பார்க்கிருர்களோ வென்று சந்தேக மடைந்தான். அந்தோ! உலக அனுபவ மறியாதவன், களங்கமற்ற உள்ளமுடையவன். ஆகையால் தன் மனதில் இருந்த சந்தேகத்தை யவளிடம் கூறிவிட்டான்.

இரங்கம்மாள் அதை மறுதலித்துவிட்டு மிக்க சாமார்த்தியத்தோடு "அப்படி யொன்றுமில்லை. எங்களுக்குள் இதைப்பற்றி யோசிக்க அவகாசமில்லாமற் போய்விட்டது. நாளைக்கு எப்படியாவது நாங்கள் இதைப்பற்றிச் சிந்தித்து முடிவு கூறிவிடுகிறேம்" என்றுள். களங்கமற்ற ஜகதீசன் தன்னைப்போலவே பிறரையும் மதிப்பவனுதலால் அவளுடைய நயவஞ்சக மொழிகளை மெய்யென்றே நம்பிக் கொண்டான். ஆகையால் ஆனது ஆயிற்று இன்னுமொரு நாளில் என்ன கெட்டுப்போகிறது என்று பொறுமையாயிருந்தான். பிறகு அன்று முழுமையும் அதைப்பற்றி யொரு பிரஸ்தாபமுமில்லை.

அன்று இரவு யாவரும் போஜனம் முடிந்தபின் அவரவர்கள் படுக்கை யறைக்குச் சென்றுர்கள். ஜகதீசன் தன் படுக்கை யறைக்குள் நுழைந்து மஞ்சத்தினருகிற் சென்றதும் பக்கத்திலிருந்த மேஜைமேல் தன் மேல்விலாசம் எழுதிய ஒரு கடிதம் இருப்பதைக் கண்டு மிக்க வியப்படைந்து

அதை யெடுத்துப் பார்த்தான். அது ஒரு ஸ்திரீயின் கையெழுத்தென்று தெரிந்தது. சகோதரிகளில் ஒருவர் எழுதி யிருப்பார்களென்று எண்ணினன். அக்கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அதில் கீழ்க்கண்டபடி யிருந்தது:—

"நானும் இரங்கம்மாளும் உம்மோடு இரண்டொரு நிமிடங்கள் சம்பாஷிக்கவேண்டும். அதுவும் கூடிய சீக்கிரத்தில். அன்னியர் துர்ப்போதனையாலும், புத்திமதியாலும் நாங்கள் பிரவேசித்திருக்கும் கெட்ட வழியிலிருந்து நாங்களிருவரும் பெரும்பாலும் திரும்பிவிட வேண்டுமென்றே உத்தேசித்திருக்கிறோம். என் வரையில் தாங்கள் இரங்கம்மாளுக்குக் கூறிய உயர்ந்த புத்திமதியின்படி நடக்கவேண்டுமென்றே பிரியம். நான் இளவரசியிடம் ஒப்புக்கொண்ட வேலையை இராஜிநாமா கொடுத்துவிடுகிறேன். இரங்கம்மாளும் அப்படியே செய்யப் பிரியமுடையவளா யிருக்கிருள். ஆனல் ஜானகியும் அம்மூதாட்டியு மட்டும் இதற்கு நேர்விரோதமா யிருக்கிருர்கள். அதோடு நாங்கள் உன்னிடம் ஏதாவது இரகசியமாய்ப் பேசுவோமென்று எங்கள் மேல் கண்வைத்துக்கொண் டிருக்கிருள். நாளை காலை போஜனம் முடிந்ததே இதைப்பற்றிப் பேசப்போகிறோம். அதற்கு முன் நானும் இரங்கம்மாளும் இதைப்பற்றித் தங்களிடம் கலந்து பேசவேண்டியது அவசியமா யிருக்கிறது ஆகையால் தாங்கள் தயவு செய்து நாளை காலை எட்டு மணிக்கு எங்களை நகர உத்தியான வனத்திலிருக்கும் முதல் மண்டபத்தில் சந்திக்கும்படி பிரார்த்திக்கிறோம். எங்களால் தங்களுக் குண்டாகும் சிரமத்திற்காக எங்களை மன்னிக்க வேண்டுகிறோம். 'தாங்கள் செய்யும் பேருபகாரத்திற்கு என்றும் நன்றி பாராட்டுவோம்.

இப்படிக்கு,

அம்புஜம்."

இதை ஜகதீசன் வாசித்துப் பார்த்ததே, "இக்கடிதம் உண்மையான நோக்கத்தோடும் சத்தியமான மனதோடுமே எழுதப்பட்டிருக்கலாகும். ஆயினும் என் மனதில் சந்தேக மாகவேயிருக்கிறது. எதற்கும் அவர்கள் கோருகிறபடி அந்தவிடத்திற்குச் சென்று சந்திப்போம்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

* * *

மறுநாள் காலை ஜகதீசன் ஏற்பாட்டின்படி உத்தியான வனத்திற்குச் சென்றான். அவன் அங்கிருக்கும் மண்டபத் தில்போய் உட்கார்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் அம்புஜம் அங்கு வந்து சேர்ந்தாள். அவள் தனியாய் வந்ததைக் கண்டதே ஜகதீசனுக்கு மறுபடி சந்தேகமுண்டாகி "எங்கே உன் தமக்கை இரங்கம்மாள்?" என்று கேட்டான்.

அம்புஜம்:—"அவள் உடுக்க மிக்க ஆலசியமாய் விட்டதா லும் சரியாய் ஒன்பது மணிக்குப் போஜனவேளை யாத லாலும் நான் வந்துவிட்டேன்" என்று சற்றும் களங்க மின்றிக் கூறினாள்.

ஞாயிற்றுக்கிழமையாகிய அன்று உத்தியான வனத் தில் அனேக ஜனங்கள் வந்திருப்பது வழக்கமாதலால் ஜக தீசன் "அப்படியாயின் நாம் சந்தித்த விஷயத்தைப்பற்றிப் பேசுவோம்" என்று ஜனச்சந்தடி யில்லாத விடத்திற்கு அழைத்துச் சென்றான்.

நேயர்களே இங்கு நடந்த சங்கதிகளையும் நாம் விவர மாய்க் கூறாமல் மிகச்சுருக்கமாய்க் கதையின் தொடர்ச்சிக்கு வேண்டியமட்டுமே கூறவேண்டியதா யிருக்கிறது. சில நூலாசிரியர்கள் காதல் விஷயங்களைப் பற்றிய சம்பாஷணை களை விவரித்து எழுதுவதால் தமது கதைக்கு மிக்க ருசி யுண்டாகுமென்று கருதுகிறார்கள். ஆனால் வாலிபர்களுக்குக்

கெட்ட விஷயங்களில் மனக்கவர்ச்சியை யுண்டாக்கத்தக்க சம்பாஷணைகளை வரையலாகாதென்பதே நமது அபிப் பிராயம்.

அம்புஜம் ஜெகதீசனை மயக்கித் தன் காதலிற்சிக்கச் செய்யவேண்டுமென்று சூழ்ச்சி செய்தே அவனுக்குக் கடி தம் வரைந்தாள். ஆகையால் இருவரும் ஜனசந்தடியில்லாத ஒரு விடத்தில்போய் ஒரு ஆசனத்தில் அமர்ந்ததும், ஜெக தீசன் அவளை நோக்கி "நீ யுன் கடிதத்தில் கூறியபடி நீயும் உன் தமக்கையும் இந்தப் பெரும்பாதகமான தொழிலில் பிரவேசிக்காமல் திரும்பி விடுவது உண்மையா?" என்று கேட்டான்.

அம்புஜம் உடனே அச்சம், மடம், நாணம் யாவும் விட் டுத் தன் காதலை வெளியிட்டாள். பிறகு தன்னால் கூடிய வரையில் ஒரு ஸ்திரீ எவ்வளவு தூரம் ஒரு மனிதனிடம் அது விஷயமாய்ப் போராடக்கூடுமோ, பலவந்தப் படுத்தல் மட்டும் தவிர அவ்வளவும் செய்துபார்த்தாள். கடைசியில் நீ யென் காதலுக்கு இணங்காவிட்டால் நான் ஆற்றில் விழுந்து மடிவேனென்றாள். என்ன கூறியும் கடைசியில் ஜெகதீசன் "நான் ஒரு உத்தமமான கன்னிகையை மணம் புரிய ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறேன். என் பிரா ணன் போவதாயினும் அவளுக்குத் துரோகம் செய்யும் விவகாரத்தைக் கனவிலும் கருதேன்" என்று கூறிவிட் டான்.

அதன் பிறகு அம்புஜம் கோபத்தோடும் விசனத்தோ டும் அவனோடு ஹோட்டலுக்குத் திரும்பினாள். ஹோட்டல் அருகிற் சென்றதும் ஜெகதீசன் அவளை நோக்கி,

"இனி நான் உங்களோடு சமபந்தியில் உட்கார்ந்து போஜனம் செய்யமாட்டேன். நீங்கள் கூறும் அபிப்பிராயத்

திற்கு நான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கமாட்டேன். நான் என் வரையில் புறப்பட்டு நேராய் இளவரசியிடம் சென்று "உம்மிடம் தோழிகளாகவரும் கன்னிகைகள் வேவுகாரர்களாக இன்ன எண்ணத்தோடு வருகிறார்கள்" என்று முன்னாடியேதெரிவித்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு ஹோட்டலின் கூடத்திற்குச் சென்றான். அம்புஜம் சொல்லொணுத் துயரத்தோடும் அவமானத்தோடும் தன் துக்கத்தை யாற்றிக்கொள்ள நேராய்த் தன் அறைக்குச் சென்றாள்.

ஜகதீசன் அங்கு சென்று உட்கார்ந்த சற்று நேரத்திற்குள் சற்று வயது முதிர்ந்த ஒரு பாஞ்சால நாட்டு மனிதன் அவனருகில் வந்து "அப்பா நான் உம்மிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்" என்றான்.

ஜகதீசன் இன்ன விஷயமென்று அறியாதவனாய் மனக்கலக்க மடைந்து "அப்படியாயின் நாம் ஒரு அறைக்குச் செல்வோம்" என்றான். அம்மனிதன் "அது அவ்வளவு அவசியமல்ல. இங்கேயே நான் சங்கதி கூறிவிடுகிறேன். நான் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன். அதோவிருக்கிற இருவரும் எனது நண்பர்கள்" என்று வாயிற்படியருகில் நின்ற வேறிரண்டு போலீஸ்காரர்களைச் சுட்டிக்காட்டி, "நீர் என்னோடு போலீஸ் கமிஷனரிடம் வரவேண்டும்" என்றான்.

ஜகதீசன்:—நான் ஏன் அவரிடம் வரவேண்டும்?" என்றான்.

போலீஸ்காரன்:—"ஏதோ விசாரிக்க மற்றப்படி விசேஷமொன்றுமில்லை. உடனே திரும்பிவந்து விடுவீர்" என்றான்.

ஜகதீசன் தான் அன்னிய நாட்டானாதலால் தன் பிரயாணச் சீட்டைச் சோதிக்கத்தான் கூப்பிடுகிறார்களென்று

கருதி "அப்படியாயின் என் அறைக்குள் சென்று பெட்டியி லிருக்கும் என் பிரயாணச் சீட்டையும் மற்ற பத்திரங்களேயும் எடுத்துக்கொண்டு வருகிறேன்'' என்ருன்.

போலீஸ்:—"உமது பத்திரங்களனைத்தும் முன்னமே நான் எடுத்துக்கொண்டேன்'' என்ருன்.

ஜகதீசன் கோபமடைந்து "என்ன? என் பெட்டியி லிருப்பதை யெடுக்க அவ்வளவு துணிகரமா?'' என்ருன். போலீஸ்காரன் எனக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது'' என்ருன்.

அந்த நாட்டுப் போலீஸார் அளவுகடந்த அதிகாரத் தைக் கையாடுகிருர்கள் என்ற சங்கதி ஜகதீசனுக்குத் தெரி யும். ஆகையால் மேல் அதிகாரியின் கட்டளேப்படி நடக் கும் இவனிடம் பேசுவதில் பயனில்லே யென்றெண்ணிக் கொண்டு "சரி கமிஷனரிடம் வருகிறேன் வா!'' என்ருன்.

உடனே ஜகதீசனும் போலீஸாரும் ஹோட்டலே விட் டுப் புறப்பட்டார்கள். வீதியில் சற்றுதூரம் சென்றபோது, போலீஸார் முன்னுடியே ஏற்பாடு செய்திருந்த ஒரு வண்டி இவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தபடியால், போலீஸ் உத்தியோகஸ்தன் ஜகதீசனே வண்டியிலேற்றித் தானும் ஏறிக்கொண்டு மற்ற இரண்டு போலீஸ்காரரையும் நடந்து வரும்படி சமிக்கை செய்தான். வண்டி யுடனே புறப்பட் டது. வழியில் ஜகதீசன் போலீஸ் கமிஷனர் தன்னே யழைத்துவரச் சொன்னதற்கு ஏதேனும் விசேஷ காரணம் இருக்கிறதாவென்று கண்டறிவதற்காக போலீஸ் உத்தி யோகஸ்தனேப் பக்குவமாய்ச் சில கேள்விகள் கேட்டான். ஆனல் உத்தியோகஸ்தன் எள்ளளவு சங்கதியும் கூறவில்லே.

சுமார் இருபது நிமிடங்கள் கழித்து வண்டி தோட் டத்திற்குள்ளிருக்கும் பிரம்மாண்டமான ஒரு கட்டிடத்தின்

எதிரிற் சென்று நின்றது. உடனே போலீஸ் உத்தியோகஸ்தன் ஜகதீசனைக் கட்டிடத்திற்குள் அழைத்துச் சென்று அங்கு ஒரு அறைக்குள் உட்கார்ந்திருந்த போலீஸ் கமிஷனர் முன் நிறுத்தித் தன்னிட மிருந்த கடிதத்தைக் கமிஷனரிடம் கொடுத்துவிட்டு எட்ட நின்றான்.

கமிஷனர் வயது முதிர்ந்த கிழநரி போன்றவர். அவர் குளிர்ந்த முகத்தோடு ஜகதீசனை நோக்கி மரியாதையாய் ஆசனத்தி லமரும்படி கூறினர். ஜகதீசன் அந்த நடக்கையால் தன்னைப்பற்றி விசேஷ சங்கதியொன்றுமிராது என்று தனக்குள் கருதிக்கொண்டே உட்கார்ந்தான். கமிஷனர் தன் கையிலிருக்கும் கடிதத்தை யவனுக்குக் காட்டி "இது என்னவென்று உமக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

ஜகதீசன் அது போலீஸ் உத்தியோகஸ்தன் தன் பெட்டியிலிருந்து எடுத்து வந்ததென் றறிந்துகொண்டு "ஆம், தெரியும். அது என் பிரயாணச் சீட்டு" என்றான் கமிஷனர் "ஆம் அய்யா. ஆனால் இதில் உமது உண்மைப் பெயர் மறைக்கப்பட்டு மாறுபெயர் எழுதப்பட்டிருக்கிறது சந்தேகத்திற்கிடமா யிருக்கிறது" என்றார். ஜகதீசன் "ஆனால் அதற்கு மிக்க திருப்திகாமான சமாதானம் கூறுவேன்" என்றான். ஆனால் கமிஷனர் "உமது சமாதானத்தைப் பற்றியும் காரணத்தைப் பற்றியும் நமக்கு ஒரு அக்கரையமில்லை. இதில் இருப்பது மாறுபெயரே யென்று ஒப்புக்கொள்ளுகிறீர். சட்டப்படி தற்காலம் நீர் இங்கு காவலில் வைக்கப்பட வேண்டியதே. இந்த உத்தியோகஸ்தர் கூட இவர் அழைத்துச் செல்லும் இடத்திற்கு நடவும்" என்று நிர்த்தாட்சணியமாய்க் கூறிவிட்டார். ஜகதீசன் "நான் சரியான காரணம் கூறும்போது அதைக் கேட்டறியாமலே..." என்று கூறத் தொடங்கும்போதே,

கமிஷனர் "அய்யா, பேசாமலிரும்...." என்ருர். ஜகதீசன் "ஒருகாலும் இருக்கமாட்டேன். நான் சுயாதீனமுடைய அன்னிய நாட்டான்..." என்று கூறிக்கொண்டிருக்கும்போதே கமிஷனர் எழுந்து அறையை விட்டுச் சென்ருர். உத்தியோகஸ்தன் ஜகதீசனை நோக்கி வாரும் என்றழைத்தான். "இனி பேசுவதில் ஒரு பயனுமில்லை. இது ஏதோ காரணத்தைக்கொண்டு முடிந்த தீர்மானத்தோடு நடக்கிற விஷயம். இதில் ஏதோ மர்ம மிருக்கிறது. இந்தக் கமிஷனரும் வேறு மேல் அதிகாரியால் ஆட்டப்டப்படுகிருர்," என்று ஜகதீசன் மனதிற் பட்டுவிட்டது. ஆகையால் ஒன்றும் பேசாமல் அப் போலீஸ் உத்தியோகஸ்தன் பின் சென்ருன்.

அந்த உத்தியோகஸ்தன் அவனை யழைத்துக்கொண்டு ஒரு இருண்ட நீண்ட தாழ்வாரம்போன்ற சந்து வழியாய்ச் சென்று அதன் கோடியிலிருந்த ஒரு அறையைத் திறந்து ஜகதீசனை யதற்குள் விட்டு கதவை மூடிப் பூட்டிக்கொண்டு சென்ருன். ஜகதீசன் சிறையாக்கப்பட்டான்.

58-வது அத்தியாயம்

மதனவல்லிக்கும் செல்லப்பனுக்கும் மணமுடிந்து இரண்டு வாரங்கள் கழிந்தன. கர்னல் மாரப்பன் வீட்டில் ஒருநாள் மாலை முக்கியமான ஒரு விருந்திற்கு யாவும் ஆயத்தமா யிருக்கின்றன. உயர்தரமான ஆகாரங்களும் குடிவகைகளும் தயார் செய்யப்பட்டிருந்தன. மாரப்பன் மிக்க நாணயமா யுடை யுடுத்திக்கொண்டு எல்லா ஏற்பாடுகளையும் பார்த்து தன் பிரதம சமையற்காரனுகிய பாரங்குசனை நோக்கி,

"பராங்குசம்! பேஷ் பேஷ்!! நீ செய்திருக்கும் ஏற்பாடுகள் மிக்க நேர்த்தியா யிருக்கின்றன. இப்போது உனக்கு எவ்வளவு பணம் சேரவேண்டும்?" என்றான்.

பராங்குசன்:—"மிகக் கொஞ்சமே! அதிகமில்லிங்கோ. மாதச் சம்பளம் ஐம்பது ரூபாய் விகிதம் மூன்று வருடச் சம்பளம் சேரவேண்டும்" என்றான்.

மாரப்பன்:—"நாளையதினம் முழுமையும் அகத்தியம் உனக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

பராங்குசன் அவ்வாறு தனக்குச் சேரவேண்டிய பணத்தைப் பற்றி யலட்சியமாய்க் கூறினானேனும் அவன் மனதில் அதைப்பற்றி மிக்க வியாகூலமே. ஆகையால் அவன் "திருட்டுக் கேக்மாறிப் பயல்—எனக்குச் சேரவேண்டிய பணத்தின் நிறத்தைக்கூட நான் காணப்போகிறதில்லை என்று நானறிவேன். இப்போது ஏதோ ஒரு பெரிய படுமோசம் செய்ய உத்தேசித்தே யிந்த விருந்தை வைத்திருக்கிறான். காலையில் இவனை வந்துகேட்டவன் கூட கோர்ட்டு அமீனாவே. ஆ! அதைப்பற்றி யிவனிடம் கூற மறந்துவிட்டேன். பரவாயில்லை. நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு சென்றான்.

உண்மையில் கர்னல் மாரப்பன் மிக்க ஆபத்தான நிலைமையில் இருக்கிறான். இந்த விருந்துச் செலவிற்குக்கூட அவன் கையில் காசு கிடையாது. பணத்திற்கு ஆசைப்பட்டு ஒரு கசாப்புக்காரன் மகளை மணம்புரிந்து கொண்டானென்று கூறியுள்ளோம். அவளிடம் மிக்க தந்திரமாய் இந்தச் செலவிற்குப் பணம் வாங்கிக்கொண்டான். இந்த விருந்தே ஒரு பெரிய படுமோசம் செய்து பணம் பறிக்க வேண்டியே செய்யப்பட்ட ஏற்பாடே. இதில் அவன் ஜெயமடையா விட்டால் அதோடு ஒன்று கடன்காரர் சிறைச்

சாலைக்குச் செல்லவேண்டும்; அல்லது நாட்டை விட்டு ஓடிப்போய்விட வேண்டும்.

நேயர்களே! அவன் ஏற்பாடு என்னவென்று நினைக்கிறீர்கள்? அறுவர் கூட்டம்கூடி மதனவல்லி விஷயமாய்ச் செய்துகொண்ட ஒப்பந்தப்படி யார் முதலில் அவளுடைய காதலைப்பெறுகிறார்களோ அவர்களுக்கு மற்றபேர் ஆறாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். இப்போது அப்பாம துஷ்டனாகிய அக்கிரமஸ்தன் மதனவல்லி தனக்கு இணங்கிவிட்டதாகக்கூறி அத்தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே இந்த ஏற்பாட்டைச் செய்தான். முன்பு வாதநாயகிச் சீமாட்டி வீட்டில் விருந்து நடந்தபோது இவன் மதனவல்லியைத் தோட்டத்தில் சந்தித்து தன் நண்பர்களையெல்லாம் காட்டிக் கொடுத்துவிட்டு முடிவில் "நீ எனக்கிணங்காவிட்டால்; நீ இணங்கிவிட்டாய் என்றே நான் பகிரங்கமாய்க் கூறி யுன்னை யவமானப்படுத்தி விடுவேன்" என்று பயமுறுத்தியதையும், அவன் கூறிய யாவும் ஒருமனிதன் வேலியில் மறைந்திருந்து கேட்டதையும் நேயர்கள் மறந்துவிட்டிருக்கமாட்டீர்கள். அதன்படியே இப்போது செய்து பந்தயப் பணத்தைப் பெற்றுத் தன் ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தீர்மானித்தான்.

இக்காரணங்களால் அந்த ஒப்பந்தத்தைச் சேர்ந்த மற்ற ஐவருமே மாரப்பன் விருந்திற்கு அழைக்கப்பட்டார்கள். மாலை ஆறரைமணி விருந்து வேளை. அதற்குள் அவர்களும் ஒவ்வொருவராய் வந்துசேர்ந்தார்கள்.

இவர்களில் குமாரவேல் பிரபு கபூர் கிருஷ்ணனை மதனவல்லியின் செய்கைகளை யறிந்து கூறும்படி வேவுகாரனை யமர்த்தி யிருந்ததால் அவள் சுகசிங்கம் பிரபு வீட்டிற்கும் இளவரசன் மாளிகைக்கும் சென்றதைக்கேட்டு அவர்கள்

இருவர்க்கும் மதனவல்லி இணங்கி விட்டாளென்று எண்ணிக்கொண்டான். இவர்களில் சுகசிங்கம் பிரபுவும் இளவாசனும் மாரப்பன் மதனவல்லியைப் பயமுறுத்தியதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பிரபுவுக்கு அவன் மேல் இருக்கும் வெறுப்பால் மாரப்பன் வார்த்தை யுண்மையாகவே யிருக்குமென்று தான் அபிப்பிராயப்படுவதாய்ப் பிரஸ்தாபித்தான். ஆனால் யாவர்கரும் மாரப்பன் நடக்கை தெரியுமாதலால் உள்ளே சந்தேகமே.

இக்காரணங்களால் செல்லப்பன் ஏமாந்து போய் அவளை மணம்புரிந்து கொண்டானென்றும், இங்குவந்தால் மிக்க அவமான மடைவானென்றும், ஆகையால் அவனுக்கும் அழைப்புச் சீட்டு அனுப்பப்பட்டிருந்தாலும் அவன் வரமாட்டானென்றும் யாவரும் பேசிக்கொண்டார்கள். ஒரு சமயம் மாரப்பனுக்கும் அவனுக்கும் பிரமாதமான சச்சரவு நேரிடுமென்று கருதினர்கள். இச்சங்கதி மாரப்பனிடம் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அவன் "செல்லப்பன் மானஸ்தனுயிருந்தால் ஒருகாலும் இங்கு வரமாட்டான்" என்றான்.

கிட்டத்தட்ட ஆறுமணிக்கு செல்லப்பன் தவிர மற்றபேர் வந்துசேர்ந்து விட்டார்கள். இவர்கள் மேற்கண்டபடி சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் மணி ஆறேகாலாய்விட்டது. அச்சமயம் கர்னல் மாரப்பனுடைய பிரதம சமையற்காரனும் காரியஸ்தனுமாகிய பராங்குசன் வந்து செல்லப்பன் வருகிறார் என்று முறைமைப்படி தன் எஜமானிடம் கூறினன். அதைக்கேட்ட மற்றபேர் வியப்பும், அய்யமும், கலவரமும் அடைந்து மிக்க ஆவலோடு அவன் நிலைமையைக்காண எதிர்பார்த்திருந்தார்கள்.

செல்லப்பனே எள்ளளவும் கிலேசமாவது மனக்கலக்கமாவது இல்லாது பூரணமாய்க் களங்கமற்ற சந்தோஷமான

உள்ளமுடையவனாகவே யவர்கள்முன் சென்றான். யாவரும் போஜன அறையில் உட்கார்ந்து சாதாரண விஷயங்களைப் பற்றி சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறிருக்கையில் கர்னலின் பிரதம ஆளாகிய பாரங்குசன் ஆவலோடு அடிக்கடி வீதியில்சென்று பார்த்துக்கொண்டே யிருந்தான். சற்று நேரத்திற்குள் ஒரு வண்டி வேகமாய் வந்து மாரப்பன் வீட்டிற்கு நாலைந்து வீடுகளுக்கு அப்புறமே நின்றதும் மூன்றுபேர் அதிலிருந்து இறங்கி மாரப்பன் வீட்டிற்கு வந்தார்கள். பாரங்குசன் தெருவாசற் படியிலேயே அவர்களைக் கண்டதும் கைவிரலை மூக்கின்மேல் வைத்துச் சமிக்கை காட்டி, "பேசாமல்வாருங்கள். செல்லப்பன் யாவும்கூறினார்" என்றியம்பிக்கொண்டே அவர்களை யழைத்துப்போய் போஜன அறைக்கு எதிரிலுள்ள ஒரு அறையில் உட்காரவைத்தான்.

நேயர்களே! அவர்கள் மூவரும் யாரென்று நினைக்கிறீர்கள்? மதனவல்லியும், கபூர் கிருஷ்டனும், அவன் ஆள் எச்சனுமே. பாரங்குசன் அவர்களை யுட்காரவைத்ததும் "செல்லப்பர் உங்கள் வரவைப்பற்றி யென்னிடம் கூறினார். அவர் மிக்க பெரிய மனிதர். இந்தக் கர்னல் மாரப்பனைப் போல் பிரதம வேலைக்காரனுக்கு வருடக்கணக்காய் சம்பளங்கொடாமல் வைத்துக்கொள்ள மாட்டார். அம்மா! இப்போது தங்களுக்கு என்னாலாகவேண்டிய வேலை என்னமோ அதைக் கட்டளை யிட்டால் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். செல்லப்பர் மிக்க உதாரத்தோடு என்வரையில் செய்யவேண்டியதைப்பற்றி வாக்களித்துவிட்டார்" என்றான்.

மதன:—அவர் உன்னை வீட்டில் தன் வேலைக்காரனாய் அமர்த்திக்கொள்வதாய்க் கூறினாரல்லவா?

பரா:—ஆம்.

மதன:—நீ செய்யவேண்டிய உதவியாவது அவர்கள் போஜனம்செய்யும் அறைக்கு எதிர் அறையில் எங்களை மறைவாய் உட்காரவைக்க வேண்டும். நான் யாவரையும் பார்க்கக்கூடியதாகவும் அவர்கள் பேசுவதைக் கேட்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

பார:—"ஆகா, அவசியம்; வாருங்கள்" என்று அவர்களையழைத்துக் கொண்டுபோய் போஜன அறையின் எதிர் அறையில் மறைவாய் உட்கார வைத்து பார்ப்பவர்களுக்குத் தெரியாதபடி எதிரில் திரை விட்டுவிட்டான்.

இதற்கிடையில் விருந்திற்கு வந்திருந்தவர்கள் போஜன வேலையைத் தொடங்கினார்கள். ஆகாரங்கள் யாவும் மிக்க உயர்தரமானவையென்று நாம் கூறவேண்டுவதில்லை. போஜனம் முடிய இரவு கிட்டத்தட்ட எட்டுமணியாயிற்று. இனி யாவரும் அங்கு என்னத்திற்காகக் கூடினார்களோ அந்த விவகாரத்தைத் தொடங்கவேண்டியதே. மாரப்பனுக்கு அவ்வேளை நெறுங்க நெறுங்க உள்ளத்தில் நடுக்கமே யுண்டாயிற்று. ஆயினும் தான் ஆரம்பித்த காரியத்தைச் சாதிக்கவே முயலவேண்டும்.

மாரப்பன் எழுந்து நின்று யாவரையும் நோக்கி "இளவரசரே! பிரபுக்களே! நண்பர்களே! இப்போது நான் பேசவேண்டிய விஷயம் என்னைப் பற்றியதே யாகையால், நமது ஏற்பாட்டிற்குப் பொக்கிஷதாரா யிருக்கும் சுகசிங்கம் பிரபுவே இச்சபைக்கு அக்கிராசனாதிபதியா யிருக்கவேண்டுமென்று கோருகிறேன்" என்றான். யாவரும் அதையாமோதிக்க சுகசிங்கம் பிரபு அக்ராசனாதிபதியாய் ஆசனத்திலமர்ந்தார்

யாவரும் மிக்க ஆவலோடு இனி நடக்கும் விவகாரங்களைக் கவனிக்க ஆயத்தமானார்கள். அக்ராசனாதிபதியாகிய

சுகசிங்கம் பிரபு எழுந்து நின்று, தன் மடியிலிருக்கும் ஆரு யிரம் சவரன்கள் நோட்டுகளாகவும் ரொக்கமாகவும் எடுத்து மேஜைமேல் வைத்து,

இளவரசரே! பிரபுக்களே! நண்பர்களே! நம் அறுவர் ஒப்பந்தத்தின்படி இத்தொகை யென்னிடம் பாதுகாப்பிற் காக வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்பாட்டின்படி இப்போது யார் மதனவல்லியின் காதலை முதலில் பெற்றதாக ருசுப் படுத்துகிறார்களோ அவர்களிடம் இதை யளிக்க நான் ஆயத்தமா யிருக்கிறேன். ஆனால் அவர்கள் அந்த விஷயத் தைச் சற்றும் அய்யமின்றி ருசுப்படுத்தவேண்டும். அதோடு இது விஷயமாய் இங்கு வெளியாகும் பிரஸ்தாபங்களை யாவ ரும் பொறுமையோடு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் மனஸ்தாபம் காட்டிக்கொள்ள லாகாதென்றும் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

யாவரும் "பேஷ் பேஷ்! தாங்கள் கூறியது சரி'' யென் றார்கள்.

அக்ராசனாதிபதி:—இன்னொரு விஷயம் நான் மனவருத்தத் தோடு கூறவேண்டியதா யிருக்கிறது. அதாவது இப் போது இங்கு பிரஸ்தாபிக்கப்பட வேண்டிய மாதை நமது நண்பராகிய செல்லப்பர் மணம்புரிந்து கொண் டிருப்பதால் இது விஷயத்தைப்பற்றி முன்னாடி அவர் ஏதாவது கூறவேண்டி யிருந்தால் கூறலாமென்பது என் அபிப்பிராயம்.

செல்லப்பன்:—நான் முதலில் கூறுவது ஒரு விஷயமே. அதாவது இதில் நாம் எப்படி முறை யேற்படுத்திக் கொண்டோமோ அவ்வாறே வரிசைக் கிரமமாய் ஒவ் வொருவரும் அவரவர்கள் அடைந்த ஜெயத்தையோ

அபஜெயத்தையோ கூறிக்கொண்டு வருவது ஒழுங் கென்று கருதுகிறேன்.

சுகசிங்கம் பிரபு:—"பேஷ் இது நல்ல ஏற்பாடே. திங்கள் குமாரவேல் பிரபு - செவ்வாய் ஸர்தார் சூரியநாயகம் - புதன் கர்னல் மாரப்பன்-வியாழம் இளவரசர்-வெள்ளி சுகசிங்கம் பிரபு-சனி செல்லப்பர். ஆகையால் முன்னே குமாரவேல் பிரபு தன் அனுபவத்தைக் கூறட்டும்" என்றார்.

அந்தப் பிரபு உடனே எழுந்து நின்று "நான் உண்மை யைக் கூறுகிறேன்; நான் ஜெயமடையவில்லை" என்றார்.

அதன் பிறகு ஸர்தார் சூரியநாயகம் எழுந்து "அவ ரைப்போலவே நானும் ஜெயமடையவில்லை" என்றார்.

சுகசிங்கம் பிரபு "கர்னல் மாரப்பன்! இப்போது உமது சங்கதியை நீர் கூறவேண்டும்" என்றார்.

கர்னல் மாரப்பன் உடனே மேஜைமேலிருந்த சாரா யத்தில் இன்னொரு கிண்ணம் குடித்துவிட்டு எழுந்து நின்று கீழ்க்கண்டபடி கூறத் தொடங்கினன்:—

"நண்பர்களே! இப்போது நான் கூறப்போகும் சங்கதி யில் இங்குள்ள நண்பர்களில் யாருக்கேனும் மனவருத்த முண்டாவதாயினும் நான் உண்மையைக் கூறவேண்டிய தற்காக விசனப்படுகிறேன். ஆனல் இதனல் சினேகிதத் திற்குப் பங்கம் நேரிடாதென்று கோருகிறேன். என் முறைப்படி நான் முயற்சி செய்ததில் பூரண ஆனந்தமும் ஜெயமு மடைந்தேன் என்று கூறச் சந்தோஷமுடையவனு யிருக்கிறேன்" என்றான்.

செல்லப்பன்:—"சரி முறைப்படி மற்ற பேர்களும் கூறி முடிக்கட்டும்" என்றான்.

உடனே இளவரசன் எழுந்து "என் கௌரவத்தையும் சத்தியத்தையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய வரையில் என் முறைப்படி நான் முயற்சி செய்தாலும் நான் ஜெயமடைந்தேனென்று கூறினல் அது பொய்யாகும்" என்றான்.

இதைக் கேட்டதே குமாவேல் பிரபுவும் ஸர்தார் சூரிய நாயகமும் மிக்க வியப்படைந்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து அடடா மாரப்பன் நம்மை மோசம் செய்தான் என்று பேசிக்கொண்டார்கள். அதன் பிறகு சுகசிங்கம் பிரபு, "இனி என்முறையே. நானும் இளவரசர் கூறியது போலவே ஜெயமடையவில்லை யென்பதே யுண்மை" என்றார்.

அதன் பிறகு சற்றுநேரம் நிர்ச்சந்தடியா யிருந்தது. கடைசியில்,

சுக:—"செல்லப்பரே! இனி நீர்தான் கூறவேண்டும்" என்றார்.

செல்:—"ஆகா தடையின்றி, நானும் மற்ற பேரைப்போல் முயற்சி செய்தேன். உண்மையாய் அவளைக் காதலித்தேன். அவளும் பிரியப்பட்டு என்னை மணம்புரிந்து கொண்டாள். இப்போது என் கலியாணத்திற்கு முன்பு கர்னல் மாரப்பன் அவள் காதலைப்பெற்றதாகத் தக்க அத்தாட்சிகளோடு ருசுப்படுத்திவிட்டால் எனக்கு அவர்மேல் கோபம்வரக் காரணமே யில்லை. அப்படிக் கின்றேல் நான் அம்மாதை மணம்புரிந்து கொண்டிருக்கிற வரையில் இவன் என் மனைவியை மிக்க அக்கிரமமாய் அவதூறு செய்வதாகும். நாம் முதலில் இந்த விஷயத்தைப் பற்றி விளையாட்டாய்ப் பந்தயம் போட்டுக்கொண்டோம். இப்போது அது விளையாட்டான நிலைமையிலில்லை; கௌரவமான கலியாணமே நடந்துவிட்டிருக்கிறது.

ஆகையால் இங்கு சபைகூடி யிருக்கும் நண்பர்கள் என் கௌரவத்தைக் கருதி இதை முன்போல் அலட்சிய மான விஷயமாய்க்கருதாமல் உண்மையே வெளிவரும்படிச் செய்வீர்களென்று பிரார்த்திக்கிறேன்'' என்றான்.

இவன் கூறியவிஷயம் யாவர் மனதிலும் உறுத்தியது. அக்கிராசனாதிபதியாகிய சுகசிங்கம் பிரபு அவனை நோக்கி,

"செல்லப்பரே. கண்டிதமாய் உண்மையே கண்டுபிடிக் கப்பட்டு இது யாரோ ஒரு கன்னிகையின் காதலை யார் பெறுகிறோம் பார்ப்போம் என்று பந்தயமல்ல. ஒருவன்- அதிலும் நம் நண்பர் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு நண்பனு டைய மனைவியின் மானாபிமானத்தைச் சேர்ந்த விஷயம்- இது ஒருகாலும் அலட்சியமாய் கருதத்தக்கதல்ல'' என் றார். மற்றபேரும் "ஆம் ஆம் சந்தேகமென்ன? இன்றைக்கு ஒருவன் மனைவிக்கு நடப்பதுபோல் தானே பின்னால் இன் னொருவன் மனைவிக்கும் சம்பவிக்கும்'' என்றார்கள்.

கர்னல் மாரப்பனுக்குத் திகில் அதிகரித்தது. ஆனால் உடனே இன்னும் இரண்டு மூன்று கிண்ணங்கள் சாராயம் குடித்து மனதைத் தைரியப்படுத்திக் கொண்டான். தான் மதனவல்லியோடு அன்று தோட்டத்தில் சம்பாஷித்த தற்கு வேறு சாட்சி யில்லையென்றே அவன் கருதியிருப்ப தால் தான் செய்திருக்கும் தந்திரமும் படுமோசமுமான ஏற்பாடு எப்படியும் ஜெயமடையுமென்றே நம்பிக்கொண் டான். விவகாரம் அவ்வளவு தூரம் நடந்துவிட்டவரையில் ஒருகை பார்த்தே தீரவேண்டுமென்ற துணிகரத்தோடு எழுந்து நின்று பின் காணுமாறு மொழியத் தொடங்கி னான்:—

"இத்தகைய விஷயத்தை நான் ருசுவின்றி கூறுவே னென்று நினைக்கவேண்டாம். இந்த விடத்தில் செல்லப்பர்

துணிந்து வந்ததைப்பற்றி நான் மிக்க வியப்படைகிறேன். சந்தர்ப்பத்தின்படி நான் உண்மையைக் கூறவேண்டியதாயிருக்கிறது ஆகையால் நான் கூறும் சங்கதிகள் இவருக்கு ஏதேனும் மனவருத்தத்தை யுண்டாக்குவதாயின் அது இவரே வலிய வரவழைத்துக்கொண்டதாய்க் கருதிக் கொள்ளவேண்டுமே யன்றி இன்னொருவரை யதற்குக் காரணமாய்க் கருதலாகாது" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட செல்லப்பன் மிக்க கோபத்தை மனதிற்குள் அடக்கிக்கொண்டு, வெளிக்குப் பொறுமையோடு பற்களைக் கடித்துக்கொண்டு மௌனமாயிருந்தான். அவன் நிலைமை நிறைபச் சூல்கொண்டு உலகத்தை யழித்துவிடத்தக்க மின்னலையும் இடிகளையும் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் கார்மேகம்போ லிருந்தது. அவன் முகத்தைக்கண்ட மற்றபேர், "ஏதோ இதில் விசேஷமிருக்கிறது. தனக்கு அவமானம் நேரிடுமென்று சற்றேனும் சந்தேகமிருந்தால் இவன் இம்மாதிரி யிருக்கவேமாட்டான். கர்னல் மாரப்பன் பெரிய அபாண்டத்தையே நிலை நாட்டப் பார்க்கிறான்போல் காண்கிறது. அப்படி யிருந்தால் அத் துஷ்டன் கடைசியில் அவமானமும் தண்டனையுமே யடைவான்" என்று பேசிக்கொண்டார்கள்.

மாரப்பன் பின்னும் கூறத் தொடங்கி "இப்போது நான் ருசுக்களைப்பற்றி கூறுகிறேன்" என்றான். அவன் ஒருவன் மட்டும் செல்லப்பனுடைய சாந்தமான நிலைமையைப்பற்றி தவறாய் அர்த்தம் செய்துகொண்டான். அதாவது, நாம் எப்படியாவது ரூபித்து விடுவோமென்று அவன் இடிவிழுந்து விட்டான் என்றெண்ணிக் கொண்டான். ஆகையால் பின்னும் தைரியத்தோடு கூறத்தொடங்கி,

"என் முறை புதன்கிழமை யென்று உங்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது. அன்று வரதநாயகிச் சீமாட்டி வீட்

டில் நடந்த விருந்திற்கு எனக்கும் அழைப்புச் சீட்டு வந்தது., அவ்விருந்திற்கு மதனவல்லியும் வருவாளென்று எனக்குத் தெரியும். ஆகையால் அங்கே யம்மாதைச் சந்தித்து என் காரியத்தை முடித்துக்கொள்வதென்றெண்ணி நானும் அந்த விருந்திற்குச் சென்று மதனவல்லியை யெனக்கு அறிமுக மாக்கிவைக்கும்படி வரதநாயகியம்மாளைக் கேட்டுக் கொண்டேன். அவ்வாறே அறிமுக மானபின் இருவரும் தோட்டத்தில் உலவச்சென்றோம். அங்கு அனேகர் இருந்தாலும் மதனவல்லியோடு கூடவந்த இருவரும் பின்தங்க நாங்கள் தனியே தூரத்தில் போய்விட்டதால் பேசவசதியாயிருந்தது. நடந்த சங்கதியைச் சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன். அப்போது நான் என் காதலைப்பற்றி பேசத்தொடங்கி, என் அதிஷ்ட வசத்தால் ஜெயமடைந்தேன். அப்போது இருவரும் ஏற்பாடு செய்துகொண்டபடி வெள்ளிக்கிழமை யிரவு என்னால் குறிக்கப்பட்ட ஒரு விடத்தில் சந்தித்தோம்...'' என்றதே,

சுகசிங்கம் பிரபு திடுக்கிட்டு இளவரசனைக் குறிப்பாய் நோக்கிப் பின்பு மாரப்பனைப் பார்த்து மிக்க வியப்போடு "என்று? அடுத்த வெள்ளிக்கிழமையா?'' என்றார்.

மாரப்பன்:—"ஆம். அதாவது செல்லப்பர் கூறியபடி அவர் அம்மாதை மணம்புரிந்து கொண்டதற்கு முன்பு. அந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்வந்த புதன்கிழமை யிவர்கள் மணம் நடந்தது. இன்னும் ஒரு சங்கதியே நான் கூறவேண்டியது. அதாவது அந்த வெள்ளிக் கிழமை யிரவு நானும் மதனவல்லியும் கௌரி வீட்டில் சந்தித்தோம்'' என்றதே,

சுகசிங்கம் பிரபு "அப்போது மணி என்ன விருக்கும்?'' என்றார்.

மார:—இரவு ஒன்பது மணி யிருக்கும்.

பிரபு:—எந்நேரம் அங்கு தங்கி யிருந்தீர்கள்?

மார:—"பதினொரு மணி வரையில் அங்கிருந்தோம்" என்றான்.

பிரபு மிக்க வியப்படைந்து மறுபடி இளவரசனைக் குறிப்பாய்ப் பார்த்துவிட்டு மாரப்பனை நோக்கி ஆத்திரத்தோடு, "அதற்கு ருசுவெங்கே?" என்றார். மாரப்பன் தன் மடியிலிருந்த ஒரு கடிதத்தை யெடுத்து பிரபுவிடம் கொடுத்து, இதோ கௌரியே இதைப்பற்றி:யளித்த சாட்சிக்கடிதம். இனி நான் ஒன்றும் கூறவேண்டியதில்லை" என்றான்.

பிரபு அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அது கள்ளக் கையொப்பம் வைத்ததாகவே யிருக்கவேண்டுமென்று நம்பினார். ஆனால் அதில் இருந்த கையொப்பம் கௌரியுடையதே யென்றறிந்து மிக்க வியப்படைந்து, மறுபடி ஒருவித விசேஷக் குறிப்போடு இளவரசனை நோக்கிய பின்,

"ஆம் இக்கடிதம் கௌரியால் எழுதப்பட்டதே. அது வரையில் நான் நிச்சயமாய்க் கூறுவேன்" என்றார்.

அதன் பிறகு அக்கடிதத்தை வாசித்துக் காட்டினார். அதில் மாரப்பன் கூறியபடி அந்த வெள்ளிக்கிழமை யிரவு ஒன்பதுமணி முதல் பதினொருமணி வரையில் அவர்கள் இருவரும் அவள் வீட்டில் ஏகாந்தமா யிருந்ததாக வெழுதப்பட்டிருந்தது.

செல்லப்பன் முன் இருந்த நிலைமையிலேயே கோபத்தை யடக்கிக்கொண்டு மௌனமாகவே யிருந்தான். மாரப்பன் "சரி நமது காரியம் ஜெயித்துவிட்டது, ஏதாவது மறுத்

துக்கூற வழி யிருந்தால் செல்லப்பன் இன்னும் பேசாம லிருக்கமாட்டான். இவன் சங்கதி யறியாமல் முட்டாள் தனமாய் இங்கு வந்துவிட்டான். இப்போது துயரமும் அவமானமும் கோபமும் அவன் மனதில் நிறைந்திருக்கின் றன. அவற்றை யடக்கமுடியாமல் தவிக்கிறான். கோபத்தை வெளியிட நியாயமில்லை. அப்படிச் செய்தால் பகிரங்கமாய் அவமானம் நேரிடும். பந்தயப் பணம் நம்முடையதே'' என்று தனக்குள் மிக்க சந்தோஷ மடைந்தான்.

சுகசிங்கம்பிரபுவும் இளவரசரும் மறுபடியொருவர்முகத் தையொருவர் பார்த்து என்னசெய்யலாம் என்று ஒருவரை யொருவர் கேட்பதுபோல் கண்களாலேயே சமிக்கைசெய்து கொண்டார்கள். வேண்டுமானால் அவர்கள் யாவரும் திடுக் கிடத்தக்க சங்கதிகளை வெளியிடலாகும். இச்சந்தர்ப்பத்தில், "அதே வெள்ளிக்கிழமை யிரவுதான் மதனவல்லி இளவா சன் மாளிகைக்குச் செல்வதாய் வாக்களித்தபடி புறப்பட்டு உத்தியான வனத்திற்குச் சென்றபோது கபடமாய் அங் கிருந்து சுகசிங்கம் பிரபுவின் வீட்டிற்குக் கொண்டுபோகப் பட்டு அங்கிருந்த சூத்திர நாற்காலியிற் சிக்கிக்கொண்டு பிறகு தப்பித்துக் கொண்டுபோய் இளவரசனிடம் சங்கதி கூறிவிட் டுத் தன் வீட்டிற்குத் திரும்பினாள்'' என்ற விஷயத்தை நண்பர்கள் நினைத்துக்கொண்டால் பிரபுவும் இளவரசரும் வியப்போடு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்ட தன் காரணம் நன்றாய் விளங்கிவிடும்.

அச்சமயம் ஸர்தார் சூரியநாயகம் குமாரவேல்பிரபுவின் செவியில் "அந்தத் திருட்டுப்பயல் மாரப்பன் நம்மிடம் பொய்கூறி யெப்படி நம்மை யேமாற்றினான் பார்த்தாயா?'' என்று குசுகுசுவெனக் கூறினார். மாரப்பனோ நமது வார்த்தை

களை மறுக்க ஒருவருமில்லை என்று ஆனந்த மடைந்தான். அக்கிரமமும் பொய்யும் நிலைநிற்கமாட்டா வென்பதையும், உண்மையே முடிவில் வெல்லும் என்பதையும், கடவுள் அக்கிரமம் எப்போதும் ஜெயம்பெறும்படி விடமாட்டா ரென்பதையும் சற்றேனும் அம்மூட துஷ்டன் கருதியவனே யல்ல. அக்கிரமத்தாலும் அசத்தியத்தாலும் ஆரம்பத்தில் எவ்வளவு பெருமையும் சந்தோஷமும் ஒருவன் அடைகிறானே, பின்னால் அவற்றிற்குப் பன்மடங் கதிகமான அவமானமும் துயரமும் துன்பமும் அடைந்தே தீருவன் என்ற உண்மையை அந்த அறிவிலி சிந்தித்தவனே யல்ல. அதனால் ஒவ்வொரு விநாடியும் அவன் சந்தோஷம் அதிகாரித்துக் கொண்டே யிருந்தது.

அச்சமயம் திடீலென்று அவர்கள் உட்கார்ந்திருக்கும் போஜன கூடத்தின் எதிரிலிருந்த அறையின் கதவு பயங்கர சத்தத்தோடு திறக்கப்பட்டதும் மதனவல்லியே அவர்கள் எதிரில் வந்து நின்றாள். அடுத்தாற்போல் காப்டன் கபுர் கிருஷ்டனும் அவன் ஆளாகிய எச்சனும் அவள் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

மதனவல்லியின் தோற்றம் சொல்லொணுக் கம்பீரமாயிருந்தது. அவள் கண்களிலிருந்து அடக்கமுடியாத கோபத்தீ பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் உதடுகள் படபடத்தன. அவள் கன்னங்கள் செம்பருத்தி மலர்போல் சிவந்திருந்தன. கோபமும் வெறுப்பும் நிறைந்த மனமுடைய அவள் மிக்க உக்கிரங்கொண்ட மகா காளிபோல் நின்றாள். அவளைக்கண்டதே செல்லப்பன் தவிர மற்ற அனைவரும் திடுக்கிட்டு பிரமிப்படைந்து ஒன்றும் தோன்றாமல் சற்று நேரம் விழித்தகண் விழித்தபடி யவளை நோக்கினார்கள். ஏக

காலத்தில் எல்லார் மனதிலும் ஏதோ ஒரே விஷயம் உதித்ததுபோல் சட்டென்று யாவர் கண்களும் கர்னல் மாரப்பன் முகத்தைச் சட்டென்று நோக்கின.

நேயர்களே! ஒரு ஸ்திரீயின் கௌரவத்தை யடியோடழித்துவிட அபாண்டங்கூறி அதை மெய்யென்று சாதிக்க முயன்ற அப்பரம துஷ்டனுடைய மனோ நிலைமை அச்சமயம் எப்படி யிருக்குமென்று கருதுகிறீர்கள்? குற்றமும் ஏழைத்தனமும் திகிலும் அவன் முகத்தில் எழுதிவைக்கப்பட்டனபோல் தோன்றின. அவன் சந்தோஷம் ஒரு விநாடியில் எங்கோ மாயமாய்ப் பறந்துவிட்டது. அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. அதிலும் அவள் பக்கத்தில் நிற்கும் கபூர் கிருஷ்டனைக் கண்டதும் அவன் ஆவி சோர்ந்துவிட்டது. ஏனெனில் அவன் அந்தரங்கத்தில் தன் விரோதியென்று மாரப்பன் அறிவான். இச்சந்தர்ப்பத்தில் அவன் ஏன் வந்தானென்பது மாரப்பனுக்குச் சற்றும் விளங்கவில்லை. ஆனால் ஏதோ காரியமின்றி வந்திருக்க மாட்டானென்று மட்டும் தெரியும். மதனவல்லி தான் கூறியது பொய்யென்று வாதிப்பாள் என்று அவன் மனதிற் றோன்றியபோதிலும் அவள் தன் வார்த்தைகளைப் பொய்ப்படுத்த எத்தகைய ஆயுதம் உபயோகிக்கப் போகிறாளென்பது அவனுக்கு எள்ளளவும் தெரியாது. தோட்டத்தில் நடந்த சங்கதியை யவள் ஒரு சமயம் கூறினும் அதை ருசுப்படுத்த அவளால் முடியாதென்பது அவன் எண்ணம். ஏனெனில் அவன் அறிந்த மட்டும் அதற்குச் சாட்சியேயில்லை. அப்படி ருசுப்படுத்த முடியாததை விசேஷமாய் அவள் கூற மாட்டாளென்றும் சிந்தித்துக் கொண்டான். எல்லாவற்றையும் விட கபூர் கிருஷ்டன் வந்திருப்பதே அவன் மனதிற்கு மிக்க திகிலா யிருந்தது.

18543

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2-பாகம்)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவ[illegible] பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இ[illegible] பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்[illegible] நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மைய[illegible] நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோ[illegible] காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின் றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர் களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளூ ஜூலையீ முதல் சென்னையில் பிரசு
கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமி
பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலெ
கீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்
ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே
ச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலுட
மற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும்
திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம்.
ல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால்
ரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி
தலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்
ளும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்
பாது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச்
ஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது
ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீ
யும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மை
யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்
கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபா
கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது
பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4
மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	
2-பாகமும் ...	4	0	தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.